# உதயன்

சுடர் : 37
கதிர் : 342
வியாழக்கிழமை
03 நவம்பர் 2022
ஐப்பசி 17 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2053
பக்கங்கள்: 12
விலை : ரூ. 50

## குழப்பத்தால் நலிவடைந்த பேரணி

கொழும்பு, நவ.3
அரசாங்கத்துக்கு எதிராக நேற்று முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தில் நேற்றுக் குழப்ப 11






# கொழும்பில் பலப்பரீட்சை

### அரசுக்கு எதிராக திரண்ட ஆர்ப்பாட்டக்காரர்கள் படைகளைக் குவித்து தடுத்தது ரணில் அரசு

**கொழும்பு, நவம்பர் 3**

**ரணில் ராஜபக்ச அரசாங்கம், அடக்குமுறையை கைவிடா விட்டால், மக்கள் சக்தியை ஒன்றுதிரட்டி தக்க பாடம் புகட்டப்படும். அதற்கான ஆரம்பம் மட்டுமே இது. பயங்கரவாதத் தடைச்சட்டத்தையும் இல்லாதொழிக்க வேண்டும்.** 11

### எமது அரசாங்கத்தை
## ஆர்ப்பாட்டம் செய்து அசைக்க முடியாது!
### எதிரணிக்கு ரணில் அறிவுரை

கொழும்பு, நவ.3
இந்த அரசாங்கத்தை ஆர்ப்பாட்டங்கள் மூலம் கவிழ்க்கமுடியாது என்பதை எதிரணியினர் புரிந்து கொள்ள வேண்டுமென்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.
கொழும்பில் நேற்று அரசாங்கத்துக்கு எதிராக எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்ட நிலையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். 11

### பருவமழையால்
## இடர் ஏற்படின் எதிர்கொள்ள முல்லை. மாவட்டம் தயார்

முல்லைத்தீவு, நவ.3
பருவப் பெயர்ச்சி மழையால் ஏற்படும் இடர்களை எதிர்கொள்ளும்வகையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் 154 இடைத்தங்கல் முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன என்று முல்லைத்தீவு மாவட்ட இடர் முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் சி.லிங்கேஸ்வரகுமார் தெரிவித்தார்.
துணுக்காய் பிரதேச செயலகத்தில் நேற்று நடைபெற்ற முன்னேற்பாட்டுக் கூட்டத்தில் 11

## பாணில் விலை யாழில் மாறாது

யாழ்ப்பாணம், நவ.3
யாழ். மாவட்டத்தில் பாணின் விலை தொடர்ந்தும் 200 ரூபாவாகவே இருக்கும் என்று யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர்கள் சங்கமும், வெதுப்பக உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கமும் அறிவித்துள்ளன. 11



எதிர்வரும் 27ஆம் திகதி மாவீரர் நாள் நினைவேந்தலை முன்னிட்டு, உடுத்துறை மாவீரர் துயிலும் இல்லம் நேற்று சிரமதானப் பணி மூலம் துப்புரவு செய்யப்பட்டது. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் நடந்த இந்த சிரமதானப் பணிகளில் நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரனும் இணைந்திருந்தார். (எ-20)



## போதை ஒழிப்பில் ஒற்றுமை தேவை
### மாவை வேண்டுகோள்

யாழ்ப்பாணம், நவ.3
தமிழர் பிரதேசங்களில் போதைப் பொருளை முற்றாக ஒழிக்க அனைவரும் ஒன்றிணைந்து நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டுமென்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை. சோ. சேனாதிராஜா தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
போதைப்பொருள் விநியோகத்தின் மையமாக வடக்கு மாகாணம் திகழ்கின்றது என்று நீதி 11

## நீதி சாகாது: ரிஷாத் ஆசுவாசம்

கொழும்பு, நவ.3
நீதி ஒருபோதும் சாகாது என்று அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினரு 11

## காணி விடுவிப்புக்காக வலி.வடக்கில் பேரணி!

யாழ்ப்பாணம், நவ.3
வலிகாமம் வடக்கில் இராணுவத்தினரால் கையகப்படுத்தப்பட்டுள்ள பொதுமக்களின் காணிகளை விடுவிக்க வேண்டுமென்று வலியுறுத்தி நேற்று கவனவீர்ப்புப் போராட்டமும், ஊர்வலமும் முன்னெடுக்கப்பட்டது.
தெல்லிப்பழைச் சந்தியில் இருந்து ஆரம்பித்த கவனவீர்ப்பு ஊர்வலம், தெல்லிப்பழை பிரதேச 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரு வாரங்களுக்குள் அரசமைப்புப் பேரவை

## நீதியமைச்சர் தெரிவிப்பு



**கொழும்பு, நவ. 3**

**எதிர்வரும் இரண்டு வாரங்களுக்குள் அரசமைப்புப் பேரவை நியமிக்கப்படும் என நீதி மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ச தெரிவித்துள்ளார்.**

சபாநாயகர் பங்கேற்புடன் அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என அமைச்சர் கூறியுள்ளார்.

கடந்த 21 ஆம் திகதி நிறைவேற்றப்பட்ட 21 ஆவது திருத்தத்தில் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன கடந்த 31 ஆம் திகதி கையொப்பமிட்டு சான்றுபடுத்தி அது சட்டமாக கொண்டுவரப்பட்டுள்ளது.

அதன்படி அரசமைப்புப் பேரவையில் 10 உறுப்பினர்கள் அங்கம் வகிக்கவுள்ளனர்.

கோத்தாபய ஜனாதிபதியாக பதவி வகித்தவேளை 20 ஆவது திருத்தச்சட்டம் ஊடாக அரசமைப்புப் பேரவை இல்லாதொழிக்கப்பட்டது. அதற்குப் பதிலாக நாடாளுமன்ற பேரவை உருவாக்கப்பட்டது.

பிரதமர், சபாநாயகர், எதிர்க்கட்சித் தலைவர் உட்பட ஐவர் அதில் அங்கம் வகித்தனர். அரசமைப்புப் பேரவைபோல் நாடாளுமன்ற பேரவைக்கு அதிகாரம் இருக்கவில்லை. ஜனாதிபதியின் நியமனம் குறித்து பரிந்துரை முன்வைக்கலாம், அதனை சவாலுக்குட்படுத்தமுடியாது. ஜனாதிபதியால் தன்னிச்சையான முறையில் நியமனம் வழங்கலாம்.

தற்போது 21 ஆவது திருத்தச் சட்டம் நடைமுறைக்கு வந்துள்ளதையடுத்து சுயாதீன ஆணைக்குழுக்களுக்கான நியமனங்கள் இடம்பெற வேண்டும். மத்திய வங்கி ஆளுநர் கூட அரசரமைப்புப் பேரவையின் அனுமதியுடனேயே இனி நியமிக்கப்படுவார் என அமைச்சர் மேலும் குறிப்பிட்டார். (ச-44)

# அமெ. தூதரகப் பெண்ணின் கைப்பை நடுவீதியில் 'அபேஸ்'

## *சிறப்பு விசாரணை ஆரம்பம்*

கொழும்பு, நவ. 3

இலங்கையிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தில் சேவையாற்றும் அமெரிக்கப் பிரஜையான பெண் ஒருவரின் கைப்பையை நடுவீதியில் வைத்து கொள்ளையிட்ட சம்பவம் தொடர்பில் சிறப்பு விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதனை கொழும்பு பிரதான நீதிவான் நந்தன அமரசிங்கவுக்கு கொழும்பு கறுவாத்தோட்டம் பொலிஸார் அறிக்கை ஊடாகத் தெரிவித்துள்ளனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு குறித்த அமெரிக்க தூதரகப் பெண் வீதியில் நடந்து சென்றுகொண்டிருந்த வேளை, அவரின் கைப்பையை மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர் என பொலிஸ்மா அதிபருக்கு அவர் தகவல் வழங்கியுள்ளார்.

முறைப்பாட்டுக்கமைய பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளதுடன் நீதிமன்றுக்கு தகவலறிக்கை சமர்ப்பித்துள்ளனர்.

அதில் கொள்ளையிடப்பட்ட கைப்பையில் குறித்த தூதரகப் பெண்ணின் ஆயிரத்து 250 டொலர் பெறுமதியான அப்பிள் ரக கையடகத்தொலைபேசி, 20 ஆயிரம் ரூபா பணம், அடையாள அட்டை, ஆவணங்கள் அடங்கலாக அவற்றின் பெறுமதி 4 லட்சத்து 70 ஆயிரம் ரூபாவுக்கும் அதிகம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சந்தேகநபர்களைக் கைது செய்ய பிரதேசத்தின் சி.சி.ரி.வி. காணொளி பதிவுகளை அடிப்படையாகக் கொண்டு விசாரணைகள் இடம்பெறுகின்றன என குறிப்பிடப்பட்டுள்ளது. (ச-இ)



# முட்டை விலை குறையலாம்

கொழும்பு, நவ. 3

முட்டையொன்றின் விலை 10 ரூபா தொடக்கம் 7 ரூபாவால் குறைக்கப்படலாம் என்று அகில இலங்கை முட்டை வர்த்தக சங்கம் தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும், சில கோழிப்பண்ணை உரிமையாளர்களின் தலையீட்டில் இந்த விலை குறைப்பு செய்யப்படமாட்டாது என சங்கத்தின் செயலாளர் அனுர மாரசிங்க தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில், கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம், கால்நடைத் தீவனத்துக்கு சோளத்துக்குப் பதிலாக சுண்ணாம்பு அரிசி அல்லது உடைந்த அரிசியை மாற்றாகப் பயன்படுத்துவது பொருத்தமானது என்று பரிந்துரைத்துள்ளது. (ஒ-14.இ)

# வீடுகளுக்குச் சென்று கொடுப்பனவு: அலுவலர்களுக்கு பாராட்டு

சாவகச்சேரி, நவ. 3

முதியோர் மற்றும் விசேட தேவையுடையோருக்கான கொடுப்பனவுகளை, அவர்களின் வீடுகளுக்கு நேரடியாகச் சென்று வழங்கிய கொடிகாமம் சமுர்த்தி வங்கி அலுவலர்களுக்கு அந்தப்பகுதி மக்கள் பாராட்டுத் தெரிவித்துள்ளனர்.

முதியோர் மற்றும் விசேட தேவையுடையோருக்கான கொடுப்பனவு, அந்தந்த அஞ்சல் அலுவலகங்களில் இதுவரை காலமும் வழங்கப்பட்டது. கடந்த செப்ரெம்பர் மாதம் தொடக்கம் கொடுப்பனவுகள் அந்தந்தப் பிரிவு சமுர்த்தி வங்கிகள் ஊடாக வழங்கப்படும் என்று அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்டது. இந்த நிலையில் ஒக்டோபர் மாதம் தொடக்கம் கொடுப்பனவு சமுர்த்தி வங்கிகளில் வழங்கப்பட்டது.

கொடுப்பனவை இதுவரை வங்கிக்கு வந்து பெற்றுக்கொள்ளாதவர்களுக்கு, சமுர்த்தி அலுவலர்கள் வீடு வீடாகச் சென்று கொடுப்பனவை வழங்கியுள்ளனர்.

வங்கி முகாமையாளர் மற்றும் சமுர்த்தி அலுவலர் ஆகியோரின் செயற்பாட்டுக்கு பாராட்டுத் தெரிவித்த மக்கள், ஏனைய வங்கிகளும் இவ்வாறான பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தனர். (ஓ.14.9)

## *எல்லைதாண்டி மீன்பிடி:*

# தமிழக மீனவர் மூவருக்கு நிபந்தனையுடன் விடுதலை

எல்லை தாண்டி மீன்பிடித்த குற்றச்சாட்டில் கைதான தமிழக மீனவர்கள் மூவரை நிபந்தனைகளுடன் விடுதலை செய்யுமாறு ஊர்காவற்றுறை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த மாதம் 20 ஆம் திகதி எல்லை தாண்டி மீன்பிடித்த குற்றச்சாட்டில் கடற்படையினரால் தமிழக மீனவர்கள் மூவர் கைதுசெய்யப்பட்டனர்.

குறித்த வழக்கு ஊர்காவற்றுறை நீதிமன்றில் இரண்டாவது முறையாக நேற்று புதன்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது மீனவர்கள் மூவரையும் 10 வருடங்களுக்கு ஒத்திவைத்த 18 மாத சிறைத் தண்டனை என்ற நிபந்தனையில் விடுவிக்குமாறு ஊர்காவற்றுறை நீதிவான் ஜே. கஜநிதிபாலன் உத்தரவிட்டார்.

மேலும் மீனவர்கள் பயன்படுத்திய படகுக்கான விசாரணை எதிர்வரும் ஜனவரி மாதம் 27 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (ச-26)

# அரசசார்பற்ற நிறுவனத்தில் இரண்டு குற்றச்செயல்கள்!

## *பொலிஸார் அசமந்தப்போக்கு*
## *மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு*

மன்னார், நவ. 3

மன்னாரிலுள்ள அரசசார்பற்ற நிறுவனம் ஒன்றுக்கு இழைக்கப்பட்ட அநீதி தொடர்பில் தீர்வு பெற்றுத்தரப்படவில்லை எனத் தெரிவித்து அந்நிறுவனத்தால் வவுனியாவிலுள்ள மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது.

மன்னாரில் மனிதநேயப் பணியில் ஈடுபட்டு வரும் குறித்த அரசசார்பற்ற நிறுவனத்தில் கடந்த ஓகஸ்ட் மாதம் நபரொருவர் உட்புகுந்து பணியாளர்களை அச்சுறுத்தியுள்ளார். பின்னர் பிறிதொருநாள் அங்கு திருட்டுச் சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

இந்த இரு குற்றச்செயல்கள் தொடர்பிலும் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டன. எனினும், குறித்த இரு முறைப்பாடுகளுக்கும் மன்னார் பொலிஸார் உரிய தீர்வைப் பெற்றுக் கொடுக்காது அசமந்தப் போக்குடன் செயற்படுகின்றனர். இதுதொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனத் தெரிவித்து குறித்த நிறுவனத்தினர் நேற்று புதன்கிழமை வவுனியா மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு பதிவு செய்துள்ளனர். (ச-213)

# சரணாலயம் பார்க்க தெற்குக்கு வந்து வடக்கு மக்கள் கஸ்டப்படுகிறார்களாம்


## *1000 ஏக்கரை கையகப்படுத்தி சரணாலயம் அமைக்குமாறு ஜனாதிபதி ரணில் வனஜீவராசிகள் திணைக்களத்துக்கு பணிப்பு*

யாழ்ப்பாணம், நவ. 3

வடக்கு மாகாணத்தில் ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் சரணாலயம் அமைப்பதற்குப் பொருத்தமான காணிகளை அடையாளம் காணுமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் அமைச்சர் மஹிந்த அமரவீரவுக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணத்தின் 5 மாவட்டங்களைச் சேர்ந்த மக்கள் சரணாலயங்கள் மற்றும் மிருகக்காட்சிச்சாலைகளைப் பார்வையிடுவதற்கு தெற்கிற்கு வரவேண்டிய சூழல் காணப்படுவதே இதற்குக் காரணமென ஜனாதிபதியால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்தநிலையில் ஜனாதிபதியின் பணிப்புரைக்கமைய அமைச்சர் மஹிந்த அமரவீர பொருத்தமான காணிகளை ஆராயுமாறு வனவளங்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மற்றும் வனஜீவராசிகள் பணிப்பாளர் நாயகம் ஆகியோருக்கு அறிவுறுத்தியுள்ளார். (ச)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல் வழக்கில் ரிஷாத் விடுவிப்பு!

கொழும்பு, நவ. 3

உயிர்த்த ஞாயிறுதின தாக்குதல் வழக்கிலிருந்து நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனை விடுதலை செய்ய கொழும்பு கோட்டை நீதவான் திலின கமகே நேற்று புதன்கிழமை உத்தரவிட்டுள்ளார்.

உயிர்த்த ஞாயிறுதின தாக்குதல் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் கடந்த ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி குற்றப் புலனாய்வுப் பிரிவால் கைது செய்யப்பட்டிருந்தார். கைதுசெய்யப்பட்டு சிறையிலிருந்த ரிஷாத் பதியுதீன் ஆறு மாதங்களின் பின்னர் கடந்த 2021 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 14 ஆம் திகதி பிணையில் விடுவிக்கப்பட்டார்.

இந்த நிலையில் வழக்கு கொழும்பு கோட்டை நீதிமன்றில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, சட்டமா அதிபரின் ஆலோசனைக்கு அமைவாக வழக்கிலிருந்து நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனை விடுதலை செய்யுமாறு நீதிமன்று உத்தரவிட்டது. (ஒ-14,இ)

## பயிற்றுவிப்பாளரால் சிறுமிகள் துஷ்பிரயோகம்



கொழும்பு, நவ. 3

அநுராதபுரம் கெக்கிராவ பிரதேசத்தில் உள்ள பிரதான பாடசாலை ஒன்றின் விளையாட்டுப் பயிற்றுவிப்பாளரால் ஆறு சிறுமிகள் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டனர் என்று கெக்கிராவ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பாடசாலையில் கல்விகற்கும் 14 மற்றும் 16 வயதுடைய 6 சிறுமிகள், விளையாட்டுப் பயிற்றுவிப்பாளரால் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்று சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையால் கெக்கிராவ பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது. முறைப்பாட்டுக்கமைய சந்தேகநபரான விளையாட்டுப் பயிற்றுவிப்பாளரை கைதுசெய்ய கெக்கிராவ பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ஒ-14,இ)

## கலை வளவாளர்களிடம் விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், நவ. 3

புத்தசாசன சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் கீழ் தென்மராட்சி கலாசார மத்திய நிலையத்தில் கர்நாடகசங்கீதம், பரதநாட்டியம், சித்திரமும் வடிவமைப்பும், நாடகமும் அரங்கியலும் மற்றும் ஆங்கிலம், சிங்களம் ஆகிய பாடநெறிகள் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

எனவே அப் பாடநெறிகளைக் கற்பிக்க ஆர்வமுடைய வளவாளர்கள், தங்களது சுயவிவரங்களை எதிர்வரும்நவம்பர்மாதம்16 ஆம்திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு நிலையப் பொறுப்பதிகாரி, கலாசார மத்தியநிலையம், தென்மராட்சி, குடமியன், வரணி. என்ற முகவரிக்கு நேரடியாகவோ அல்லது தபால்மூலமாகவோ அனுப்பிவைக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. மேலதிக விவரங்களுக்கு 0776696019 என்ற அலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-14)

★ ★ ★

சண்டிலிப்பாய் கலாசார மத்திய நிலையத்தில் கர்நாடக சங்கீதம், பரதநாட்டியம், சித்திரமும் வடிவமைப்பும், நாடகமும்அரங்கியலும், ஆங்கிலம் மற்றும் மிருதங்கம், வயலின் ஆகிய பாடநெறிகள் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

எனவே பாடநெறிகளைக் கற்பிக்க ஆர்வமுடைய வளவாளர்கள், தங்களது சுயவிவரங்களை எதிர்வரும் நவம்பர்மாதம்14 ஆம்திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு நிலையப் பொறுப்பதிகாரி, கலாசார மத்திய நிலையம், ஐயனார் கோவிலடி, வடலியடைப்பு, பண்டத்தரிப்பு. என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. மேலதிக விவரங்களுக்கு 0718787644 என்ற அலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-14)

## மேய்ச்சலுக்கு விடப்படும் மாடுகள் இனந்தெரியாதோரால் களவு!

சாவகச்சேரி, நவ. 3

தென்மராட்சி வடக்குப் பகுதியில் மேய்ச்சலுக்கு விடப்படும் மாடுகள் இனந்தெரியாதோரால் வாகனங்களில் ஏற்றிச் செல்லப்படுகின்றன என்று அந்தப்பகுதி மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இது தொடர்பில் அந்தப்பகுதி மக்கள் தெரிவிக்கையில்;

வரணி, மந்துவில், கொடிகாமம் போன்ற இடங்களில் மேய்ச்சலுக்குக் கட்டப்படும் மாடுகள் அந்தப் பகுதியில் உள்ள மழை வெள்ளம் இல்லாத மேட்டு நிலங்களில் இரவு கூட்டமாகத் தங்குகின்றன.

அவ்வேளையில் வாகனங்களில் வருவோர் கூட்டமாக நிற்கும் மாடுகளைப் பிடித்து வாகனங்களில் ஏற்றிச் செல்கின்றனர். இந்தச் சம்பவங்கள் தற்போது தென்மராட்சியில் அதிகரித்து வருகின்றன. கடந்த மூன்று தினங்களில் 10க்கு மேற்பட்ட மாடுகள் - இவ்வாறு காணாமற் போயுள்ளன - என்றனர்.

இதேவேளை, வரணிப் பகுதியில் அண்மையில் வீட்டின் அருகேயுள்ள காணிக்குள் கட்டியிருந்த மாட்டை, காணியின் வேலியை வெட்டி திருடிச் சென்றுள்ளனர் எனவும் தெரிவித்தனர். (ஒ-14,9)

## தெல்லிப்பழையில் அதிக மழைவீழ்ச்சி

யாழ்ப்பாணம், நவ. 3

யாழ்.மாவட்டத்தில் கடந்த திங்கட்கிழமை காலை 8.30 மணி முதல் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணி வரையான 24 மணி நேரத்தில் தெல்லிப்பழையில் அதிகூடிய மழைவீழ்ச்சியாக 149.1 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகி உள்ளது என்று திருநெல்வேலி வானிலை அவதான நிலையத்தின் பொறுப்பதிகாரி ரி.பிரதீபன் நேற்றுமுன்தினம் தெரிவித்தார்.

குறித்த காலப்பகுதியில் அச்சுவேலியில் 145.1 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும், யாழ்.நகரப் பகுதியில் 138.2 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும், யாழ்.கோட்டையில் 126.0 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும், சாவகச்சேரியில் 123.6 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும், திருநெல்வேலியில் 117.6 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும், நெடுந்தீவில் 93.7 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும், நயினாதீவில் 70.6 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும், வடமராட்சி அம்பனில் 59.6 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும், பருத்தித்துறையில் 30.5 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும் பதிவாகியுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஒ-14,27)

## நூற்றாண்டு விழா மலருக்கு சாதனை விவரங்கள் கோரல்

யாழ்ப்பாணம், நவ. 3

இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலய நூற்றாண்டு விழா மலருக்கு ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன. அதற்கமைய 1922 ஆம் ஆண்டு முதல் இன்று வரை பாடசாலையில் கற்ற, கற்றுக்கொண்டிருக்கின்ற மாணவர்களில், இணைப்பாடவிதான செயற்பாடுகளில் மாவட்ட மட்டம், மாகாண மட்டம், தேசிய மட்டம் (தனி, குழு) ஆகிய வற்றில் சாதனை படைத்த மாணவர்களின் பெயர், படங்கள் போன்ற விவரங்கள் யாரிடமாவது கைவசம் இருந்தால் அவற்றை எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னர் வித்தியாலயத்தின் அதிபர் அலுவலகத்தில் ஒப்படைக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் விழா மலரில் பிரசுரிப்பதற்கு மாணவர்களிடமிருந்து கட்டுரை, கவிதை போன்ற ஆக்கங்களும் கோரப்பட்டுள்ளன. (ஒ-14)

## கசிப்பு உற்பத்தி இருவர் கைது!



யாழ்ப்பாணம், நவ. 3

நீர்வேலிப் பகுதியிலுள்ள வீட்டில் வைத்து கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட இருவர் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டனர்.

யாழ்.மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

கைதுசெய்யப்பட்டவர்கள் 40 வயதான பெண்ணும் 35 வயதான ஆணும் என்று தெரிவிக்கப்பட்டது. அத்துடன் வீட்டிலிருந்து 20 லீற்றர் கசிப்பு, 50 லீற்றர் கோடா மற்றும் கசிப்பு காய்ச்சிய உபகரணங்கள் போன்றவை கைப்பற்றப்பட்டன.

கைது செய்யப்பட்ட இருவரும் சான்றுப் பொருள்களுடன் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டனர் என்று யாழ்.மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்தனர். (ஒ-14,27)

## முல்லை நீதிமன்றிலிருந்து தப்பியோடிய சந்தேகநபர்!

### பொலிஸாரால் கைது

முல்லைத்தீவு, நவ. 3

முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்றத்தில் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்ட சந்தேகநபர் நீதிமன்ற வளாகத்திலிருந்து தப்பியோடியதையடுத்து பொலிஸார்அவரைத் துரத்திப் பிடித்து கைதுசெய்துள்ளனர்.

சிவநகர் பகுதியைச் சேர்ந்த 28 வயதுடைய குடும்பஸ்தர் ஒருவரே கடந்த திங்கட்கிழமை இவ்வாறு நீதிமன்றிலிருந்து தப்பியோடியுள்ளார்.

புதுக்குடியிருப்பு 6ஆம் வட்டாரம் சிவநகர் பகுதியில் பட்டப்பகலில் வீடுடைத்து பெறுமதியான நகைகள் திருடிய குற்றச்சாட்டில் குறித்த சந்தேகநபர் புதுக்குடியிருப்பு பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

கடந்த திங்கட்கிழமை முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றில் அவரை பொலிஸார் முற்படுத்தினர். எதிர்வரும் 8ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டது.

இந்த நிலையில் சந்தேகநபர் குற்றவாளிக்கூண்டிலிருந்து இறங்கி வந்த போது நீதிமன்ற வாசல் வழியாக தப்பியோடியுள்ளார்.

அதனையடுத்து புதுக்குடியிருப்பு பொலிஸார் சந்தேகநபரை துரத்திக் கொண்டு சென்று அவரது வீட்டில் வைத்து கைது செய்துள்ளனர். அத்துடன் அவருடன் தொடர்புடைய மற்றொரு சந்தேகநபரையும் பொலிஸார் கைதுசெய்தனர்.

இருவரையும் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ச-19)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# நாடு மீட்சியுற அனைவரும் ஒன்றிணைதல் வேண்டும்!

## துமிந்த திஸாநாயக்க அழைப்பு

**கொழும்பு, நவ.3**

**சிறிலங்கா சுதந்திரக்கட்சியிலிருந்து விலகிச் சென்று பொதுஜன பெரமுனவில் இணைந்த பெரும்பாலானோர் மீண்டும் எம்முடன் இணைய விருப்பம் தெரிவித்துள்ளனர். அனைவரை யும் ஒன்றி ணைத்து நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்வதற்கான செயற்றிட்டத்தை வகுக்கவேண்டும்.**

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்தார்.

சுதந்திரக்கட்சியின் மத்திய குழுக்கூட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. அதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சுதந்திரக் கட்சியிலிருந்து விலகிச் சென்ற வர்களே தற்போது பொதுஜன பெரமுன வில் உள்ளனர்.

பொதுஜன பெரமுனவிலுள்ள பெரும்பா லானவர்கள் மீண்டும் சுதந்திரக் கட்சி யுடன் இணைவதற்கு விருப்பம் தெரி வித்துள்ளனர்.

சுதந்திரக் கட்சிக்குள் காணப்பட்ட இரு வேறுபட்ட நிலைப்பாடுகளை எம்மால் ஒன்றிணைக்கமுடியும்.

நாட்டின் பிரச்சினைக்குத் தீர்வாகவே சிறிலங்கா சுதந்திரக் கட்சி தேசிய அர சாங்கத்தை பரிந்துரைத்தது. தினந்தோ றும் ஈடுபடும் விமர்சன அரசியலுக்கு அப்பாற் சென்று அனைவரும் ஒன்றி ணைந்து நாட்டை எவ்வாறு மீளக் கட்டி யெழுப்புவதில் அவதானம் செலுத்த வேண்டும். நாம் அனைத்து சந்தர்ப்பங் களிலும் கட்சியின் தீர்மானங்களுக்கு அமையவே செயற்பட்டுள்ளோம்.

அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படும் சிறந்த வேலைத்திட்டங்களுக்கு நாம் ஒத்துழைப்புக்களை வழங்குவோம்- என் றார். (ச-இ)


# மரண அறிவித்தல்

மண்ணில் 04 . 11 . 1960

விண்ணில் 27 . 10 . 2022



## ஆறுமுகம் ரஞ்சன்

யாழ் நயினாதீவு 7ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸ் - வில்பரிசிஸ் ஐ வதிவிடமாகவும் கொண்ட ஆறுமுகம் ரஞ்சன் அவர்கள் கடந்த (27.10.2022) வியாழக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் கமலம் தம்பதிகளின் பாசமிகு கனிஷ்ட புத்திரனும், காலஞ்சென்றவர்களான செல்லையா (டிக்கோயா) தனலெட்சுமி தம்பதிகளின் பாசமிகு மருமகனும், இதயரஜனி அவர்களின் ஆருயிர் கணவரும், ஆரணி, செந்தூரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், ராம்குமாரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான தனபாலசிங்கம், சதர்மதேவா (சின்னராசா) மற்றும் வேலாயுதபிள்ளை, சரோசினிதேவி, செல்வராசா, கிருஷ்ணகுமாரி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், சங்கீதாவின் சகலனும், யோகாம்பிகை, சரஸ்வதி, பாலசுப்பிரமணியம் தனலெட்சுமி, காந்திமலர், இராசபாலன், ஜெயவதனி, ஜெகதீசன், சுதர்சன் (கிராம சேவகர்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், அக்ஷயா வைஷ்ணவியின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம். பார்வைக்கு : சனிக்கிழமை 29.10.2022 15:00pm-16:00pm 95 Rue Marcel sembat - 93430 Villetaneuse - France, செவ்வாய்க்கிழமை 01.11.2022 15:00pm - 16:00pm 95 Rue Marcel sembat - 93430 Villetaneuse -France. **கிரியை :-** வியாழக்கிழமை 03/11/2022 12:15pm - 13:30pm 95 Rue Marcel sembat - 93430 Villetaneuse - France. **தகனம்:** வியாழக்கிழமை 03/11/2022-13:45pm -15:00pm 95 Rue Marcel sembat - 93430 Villetaneuse- France. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(CR 38424) (3/6)

**தொடர்புகளுக்கு:**

இதயரஜனி- மனைவி (பிரான்ஸ்) : 0033777969165

ஆரணி - மகள், (பிரான்ஸ்) : 0033664540941

செந்தூரன் - மகன் ( பிரான்ஸ்) : 0033650797897

செல்வராசா- சகோதரன் (லண்டன்) : 00447584188145

சுதர்சன் - மைத்துனர் (இலங்கை ) 0094718475499

சரோசினி, கிருஷ்ணகுமாரி - சகோதரிகள் (இலங்கை): 0094772405580

**தகவல்: குடும்பத்தினர்**


# டெங்குத் தொற்று அதிகரிப்பு சுகாதாரப் பிரிவு எச்சரிக்கை



**யாழ்ப்பாணம், நவ. 3**

மழைகாலம் ஆரம்பித்துள்ள நிலையில் டெங்கு தொற்றுத் தொடர்பில் தென்மராட்சிப் பிரதேச மக்கள் விழிப்புணர்வுடன் செயற்பட வேண்டும் என சாவகச்சேரி சுகாதார மருத்துவ பிரிவு அறிவுறுத்தியுள்ளது.

கடந்த ஒக்ரோபர் மாதம் மாத்திரம் தென்மராட்சியில் 10 பேர் வரையில் டெங்குத் தொற்றுக்குள்ளாகியுள்ளனர்.

மீசாலை வடக்கு, நாவற்குழி மேற்கு, கைதடி கிழக்கு, மிருசுவில், தவசிக்குளம், சங்கத்தானை, சாவகச்சேரி ஆகிய இடங்களிலே அதிகளவான தொற்றாளர்கள் இனங்காணப் பட்டுள்ளனர்.

தற்போது மழை தொடர்ச்சியாக பெய்து வருகின்றது. இத னால் பல இடங்களில் வெள்ளம் தேக்கமடையும் நிலை காணப்படும். வெள்ளம் தேக்கமடையும் இடங்கள் காணப்ப டின் அந்தந்தப் பகுதியிலுள்ள பொது அமைப்புக்கள் மக்க ளின் பங்களிப்புடன் நீர் தேங்காதவாறு வடிகால்களை அமைத்து வெள்ளம் வழிந்தோடும் ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும். டெங்கு நுளம்பு உற்பத்தியாகக்கூடிய நீரேந்து பொருள்கள் காணப்படின் அவற்றை அப்புறப் படுத்தி முழுமையான ஒத்துழைப்பை மக்கள் வழங்க வேண்டும் என்றும் சுகாதாரப் பிரிவு அறிவுறுத்தியுள்ளது. (ச-9)

# ஆசிரியப் பரீட்சார்த்திகள் பிரச்சினைகளுக்குத் தீர்வு

## கல்வியமைச்சர் உறுதி

**கொழும்பு, நவ. 3**

ஆசிரியர் பரீட்சைக்குத் தோற்றவுள்ளவர் களுக்கான பிரச்சினைகளுக்குத் தீர்வைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனக் கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.



ஆசிரியர் பரீட்சைக்காகத் தகுதி பெற்றுள்ள சகலருக்கும் அதற்கான வாய்ப்பை வழங்க வேண்டுமென்று ஆசிரியர் பரீட்சைக்குத் தோற்ற முடியாத பட்டதாரிகள் சங்கம் கல்வி அமைச்சுக்கு முன்பாக கடந்த திங்கட்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டது.

இதன்போது, அவர்களுடன் கலந்துரையாடிய கல்வியமைச்சர், சகலரும் பரீட்சைக்குத் தோற்றும் வகையில் அமைச்சரவைப் பத்திர மொன்று அங்கீகாரம் பெற்றுக்கொடுக்கப் படும்.

ஆசிரியர்கள் பரீட்சைக்குத் தயாராகுங்கள் என உறுதியளித்தார். (ச-இ)

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவைப்படும் நாள். சிறிய அளவில் உடல்நலம் பாதிக்கப் பட்டாலும், எளிய சிகிச்சையினால் உடனே சரியாகிவிடும். கருத்துவேறு பாடுகள் நீங்கி சுமுக உறவு ஏற்படும்.

**இடபம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. குடும்பத்தில் உறவி னர்களால் செலவுகள் ஏற்பட்டாலும் அதனால் மகிழ்ச்சியே ஏற்படும்.

**மிதுனம்:** இன்று சாதிக்கும் நாளாக அமையும். தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். பிள்ளைகள் உங்கள் அறிவுரையை ஏற்றுக்கொள்வார்கள்.

**கடகம்:** சகோதர வகையில் எதிர் பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். தந்தையிடம் எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும். சிலருக்கு வீண் செலவுகள் ஏற்படும். நண்பர்கள் மூலம் மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும்.

**சிம்மம்:** சுறுசுறுப்பாகச் செயற்படுவீர் கள். உறவினர்கள் உதவியுடன் சுப நிகழ்ச்சிக்கான பேச்சு சாதகமாக முடியும். நீண்டநாள்களாக எதிர்பார்த்த பணம் இன்று கிடைக்கும். ஏற்பட்டிருந்த பிணக்குகள் நீங்கும்.

**கன்னி:** மனதில் சிறுசிறு குழப்பங் கள் ஏற்பட்டு நீங்கும். இன்று குடும் பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதைத் தவிர்க்கவும். சிலருக்கு எதிர்பாராத செலவுகளால் கடன் வாங்க நேரிடும்.

**துலாம்:** எதிலும் பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது. மற்றவர்க ளால் மறைமுகத் தொல்லைகளும், விமர்சனங்களும் ஏற்படக்கூடும். முடிவுகளை ஒருமுறைக்குப் பலமுறை யோசித்து எடுப்பது நல்லது.

**விருச்சிகம்:** புதிய முயற்சிகள் வெற்றிகரமாக நிறைவேறும். எதிரி க ளால் ஏற்பட்ட தொல்லைகள் விலகும். சகோதரர்களால் ஆதாயம் உண்டா கும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். உதவி கிடைக்கும்.

**தனுசு:** சாதிக்கும் நாளாக அமையும். வாழ்க்கைத்துணை மூலம் எதிர்பா ராத பொருள் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும்.

**மகரம்:** கருத்துவேறுபாடு நீங்கும். பிள்ளைகளுக்காக செலவு செய்ய நேரும். வயிறு தொடர்பான பிரச் சினை ஏற்படக்கூடும் என்பதால், உணவு விஷயத்தில் கவனம் தேவை.

**கும்பம்:** ஆரோக்கியத்தில் கவனம் தேவை. குடும்பத்தினரின் தேவை களை நிறைவேற்றுவீர்கள். உறவி னர்களிடம் இருந்து எதிர்பார்த்த உதவி கிடைக்கும். மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

**மீனம்:** எடுத்த காரியம் அனுகூலமாகும். உறவினர்கள் வகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும். சிலருக்கு எதிர்பாராத பண வரவுக்கு வாய்ப்பு உள்ளது. பொறுமை யைக் கடைப்பிடிப்பது நல்லது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## மரநடுகை தமிழர்களின் கடமை!

தமிழ் மக்களின் உணர்வுகளுடன் ஒன்றித்த கார்த்திகை மாதத்தில்தான், எம் இனத்தின் விடுதலைக்காகக் காவியமானவர்களை நினைந்துருகும் வாரமும் வருகின்றது. எதிர்காலச் சந்ததிக்காக வித்தாகிப் போனவர்களை நினைந்துருகும் இந்த மாதத்தில் எதிர்காலச் சந்ததிக்காக நாம் அனைவரும் செய்ய வேண்டிய ஒரு விடயத்தை நினைவில் இருத்துவது அவசியம்.

நாம் வாழும் உலகு இப்போது காலநிலைச் சிக்கல்களை எதிர்கொள்ள ஆரம்பித்திருக்கின்றது. வறட்சி, வெள்ளம், சூறாவளிகள், கடல் மட்ட உயர்வு என உலகம் முழுவதும் இயற்கை தனது சீற்றத்தைக் காட்டிக் கொண்டிருக்கின்றது. வகைதொகையின்றி மரங்களை அழித்ததன் விளைவுகளே இப்போது இயற்கைச் சீற்றங்களாகப் பாயத் தொடங்கியிருக்கின்றன. இந்த நிலைமை எதிர்காலத்தில் இன்னும் இன்னும் அதிகரிக்கும். பூமியில் மனிதன் வாழ முடியாத சூழ்நிலையை உருவாக்கும் என்பது துறைசார்ந்தவர்களின் அச்சமாக இருக்கின்றது.

தமிழர் பிரதேசங்களில் தசாப்தத்துக்கு முந்திய காலத்தில் மரங்கள் பேணிப்பாதுகாக்கப்பட்டிருந்தன. தேவையற்று மரங்களை அழிப்பது கண்டிப்புடன் தடுக்கப்பட்டிருந்தது, தமிழர் பிரதேசத்தின் இயற்கை பாதுகாப்புடன் இருந்தது. போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டதன் பின்னர் நிலைமை தலைகீழாக மாறியிருக்கின்றது. காடுகள் வகைதொகையின்றி அழிக்கப்படுகின்றன. அவற்றைத் தடுக்க வேண்டியவர்களே அதைக் கண்டும் காணாது விடும் போக்கே தமிழர் பிரதேசங்களில் இருக்கின்றது.

மாற்றாந்தாய் போக்குடன் தமிழர் பகுதிகள் கைவிடப்பட்டிருக்கும் நிலையில், எதிர்காலத்துக்காக சிந்தித்துச் செயற்பட வேண்டியது தமிழர்களின் முதற்கடமையாக இருக்கின்றது. தமிழர் பிரதேசத்தில் பெருந்தொகை மரங்கள் அழித்தொழிக்கப்பட்டிருக்கும் நிலையில், இயற்கையைக் கட்டிக் காக்க வேண்டியது எமது எதிர்கால இருப்புக்கு மிக அவசியமானதாகும். அந்தப் பெரும்பணியை இந்தப் புனிதமான மாதத்தில் அனைவரும் ஒன்றிணைந்து முழுவீச்சுடன் முன்னெடுக்க வேண்டும்.


வடக்கு மாகாண சபை இயங்கியபோது, கார்த்திகை மாதம் மரநடுகை மாதமாகப் பிரகடனப்படுத்தப்பட்டு, மரநடுகை ஊக்குவிக்கப்பட்டிருந்தது. இப்போதும் ஒவ்வொரு ஆண்டும் கார்த்திகை மாதத்தில் மரநடுகை பற்றிய விழிப்பூட்டல்களும், வழிகாட்டுதல்களும் வழங்கி தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் முன்னெடுத்து வருகின்றது. எம் இனத்தின் எதிர்காலத்துக்காக இந்தப் பெரும் முயற்சியில் பல கரங்கள் கோர்க்க வேண்டும்.

இந்தப் புனிதமான மாதத்தில் எமக்காக வித்தாகிப் போனவர்களை மனதில் இருத்தி ஒவ்வொருவரும் ஒரு மரம் நடுவோம். அந்த மரத்தைப் பேணிப் பாதுகாத்து எம் சந்ததிக்கு அழகான உலகைக் கொடுப்போம் என திடசங்கற்பம் பூணுவோம்.

## வடமாகாண மரநடுகை மாதம் — நவம்பர் 2022

"எவரொருவர் மரங்களை நாட்டுகின்றாரோ, அவர் தன்னைவிட மற்றவர்களை அதிகம் நேசிப்பவராவார்"
– தோமஸ் ஃபுல்லா (இங்கிலாந்து வரலாற்றாளர்)






# இணைந்து செயற்படுவது தேர்தலுக்கான இலக்கல்ல!

## மனோகணேசன் எம்.பி. தெரிவிப்பு

**கொழும்பு, ஒக். 3**



**'இணைந்து செயற்படுவது என்பது எப்போதும் தேர்தலை இலக்கு வைத்த செயற்பாடு' தான் என்பதிலிருந்து நாம் வெளியே வரவேண்டும். நாம் பிரதிநிதித்துவம் செய்யும் மக்களின் பொதுப் பிரச்சினைகள் தொடர்பில் மாற்றுக் கட்சியினருடன் குறைந்தபட்சம் பொது வேலைத் திட்டம் என்ற அடிப்படையில் பல்குழல் எறிகணைகளாக செயற்படவேண்டும் என்பதே எமது இலக்கு.**

- இவ்வாறு தமிழ் முற்போக்கு கூட்டணித் தலைவர் மனோகணேசன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இன்று தேர்தல் கூட்டணி பற்றி, இ.தொ.க.வுடன் நாம் பேசவில்லை. தென்னிலங்கை தமிழ் கட்சிகள் ஒரு கூட்டணிக்குள் வரவேண்டும் என்று எவரும் எமக்கு அழுத்தம் தரவும் இல்லை.

ஏற்கனவே தமிழ் முற்போக்கு கூட்டணி தயாரித்துள்ள, மலையக தமிழர் தேசிய அரசியல் அபிலாஷை ஆவணம் இ.தொ.கா. விடம் வழங்கப்பட்டது. அந்த ஆவணத்தில் எமது மக்கள் இந்த நாட்டின் முழுமையான குடிமக்களாக ஏற்கப்படவேண்டும் என்பதை தர்க்கரீதியாக வலியுறுத்தியுள்ளோம்.

இனத்தின், சமூகத்தின், நாட்டின் பொதுப் பிரச்சினைகள், சவால்கள், இலக்குகள் தொடர்பில் மாறுபட்ட கட்சித் தலைவர்கள் ஒன்றாக அமர்வது, பேச்சுகளை நடத்துவதே முற்போக்கான கலாசாரம்.

எமது கட்சிகளுக்கு வெளியே பெரும்பான்மை அரசியல்வாதிகளுடனும் பொது விடயங்களில் ஒன்றாய் அமர்ந்து உரையாட நாம் தயங்குவதில்லை. எல்லா கூட்டு அமர்வுகளும் தேர்தல் கூட்டுகள் என்றும், எல்லாச் சந்திப்புகளும் அமைச்சரவையில் இடம்பிடிக்க என்றும், எடுத்த எடுப்பிலேயே முடிவு செய்யக்கூடாது. நாம் பிரதிநிதித்துவம் செய்யும் மக்களின் பொதுப் பிரச்சினைகள் தொடர்பில் மாற்றுக் கட்சியினருடன், குறைந்தபட்ச பொது வேலைத்திட்டம் என்ற அடிப்படையில் கூட்டாக எடுத்துச் சென்று கலந்துரையாடுவதே எமது முக்கியமான பணி - என்றார். (ச-இ)

# ஐ.எம்.எப். தொடர்பில் இணக்கம் எட்டப்படும்

சர்வதேச நாணய நிதியம் எதிர்பார்க்கும் நிதி உறுதிப்பாடுகள் தொடர்பில் இணக்கப்பாடு எட்டப்படும் என்று நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகளுக்கும் நிதியமைச்சின் அதிகாரிகளுக்கும் இடையில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இணையவழிக் கலந்துரையாடலொன்று இடம்பெற்றது. சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகளுக்கும் நிதியமைச்சின் பிரதிநிதிகளுக்கும் இடையிலான பேச்சுக்களின் போது, சர்வதேச நாணய நிதியத்துடன் இன்று நடைபெறவுள்ள கலந்துரையாடலுக்கான தயார்ப்படுத்தலாக இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது என்று தெரிவித்த நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய, சர்வதேச நாணய நிதியம் எதிர்பார்க்கும் நிதி உறுதிப்பாடுகள் தொடர்பில் இணக்கப்பாடு எட்டப்படும் என்றும் தெரிவித்தார். (ஒ-14,இ)

**நாளை** 04.11.2022 வெள்ளிக்கிழமை ஐப்பசி 18

சுபநேரம் : 06.04 - 07.34
ராகுகாலம்: 10.34 - 12.04

உத்தான ஏகாதசி விரதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியா வடக்கு பிரதேச சபை
## 2023.01.01 முதல் 2023.12.31 வரை மரக்கறி சந்தைகள், மீன் சந்தைகள், இறைச்சிக்கடைகள் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் நிலையம் என்பவற்றை குத்தகைக்கு விடுவதற்கான
# கேள்வி அறிவித்தல் - 2023

**கேள்விப் பத்திரம் வழங்கும் திகதி : 2022.11.04 தொடக்கம் 2022.11.18 ஆம் திகதி பி.ப 1.50 வரை**
**கேள்விப்பத்திரம் ஏற்கும் கடைசித் திகதி : 2022.11.18 பிற்பகல் 02.00 மணி வரை**
**கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதி : 2022.11.18 பிற்பகல் 02.10 மணி**
**கேள்வி அறிவித்தல் அட்டவணை**

| தொடர் இல | சந்தை | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரப் பணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு | ஆகக் குறைந்த கேள்வித் தொகை |
|---|---|---|---|---|
| 1 | புளியங்குளம் கோழிக்கடை | 2,000.00 | 10,000.00 | 50,000.00 |
| 2 | கனகராயன்குளம் கோழிக்கடை | 2,000.00 | 10,000.00 | 250,000.00 |
| 3 | நெடுங்கேணி சந்தை கோழிக்கடை இல 01 | 2,000.00 | 10,000.00 | 550,000.00 |
| 4 | நெடுங்கேணி சந்தை கோழிக்கடை இல 02 | 2,000.00 | 10,000.00 | 600,000.00 |
| 5 | நைனாமடு கோழிக்கடை | 2,000.00 | 5,000.00 | 50,000.00 |
| 6 | புளியங்குளம் மீன்கடை | 2,000.00 | 5,000.00 | 30,000.00 |
| 7 | கனகராயன்குளம் மீன்சந்தை | 2,000.00 | 10,000.00 | 350,000.00 |
| 8 | நெடுங்கேணி மீன்சந்தை | 2,000.00 | 10,000.00 | 150,000.00 |
| 9 | புளியங்குளம் மரக்கறி சந்தை | 2,000.00 | 10,000.00 | 60,000.00 |
| 10 | கனகராயன்குளம் மரக்கறி சந்தை | 2,000.00 | 10,000.00 | 350,000.00 |
| 11 | நெடுங்கேணி மரக்கறி சந்தை | 2,000.00 | 10,000.00 | 600,000.00 |
| 12 | நைனாமடு மரக்கறி சந்தை | 2,000.00 | 5,000.00 | 25,000.00 |
| 13 | கனகராயன்குளம் தெற்கு மரக்கறிச் சந்தை | 2,000.00 | 10,000.00 | 250,000.00 |
| 14 | நெடுங்கேணி சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் நிலையம் | 2,000.00 | 5,000.00 | 250,000.00 |

**கேள்வி நிபந்தனைகள்:**

01. கேள்விப்பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதி, இரண்டாம் பிரதி என கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிடுவதோடு எதற்கான கேள்வி விண்ணப்பம் என்பதனையும் குறிப்பிட்டு **"தவிசாளர், வவுனியா வடக்கு பிரதேசசபை, நெடுங்கேணி"** என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் கேள்விப்பத்திரம் திறக்கும் நேரத்திற்கு முன்னதாக கிடைக்கக்கூடியவாறு அனுப்புதல் வேண்டும். அல்லது அலுவலகத்தில் அதற்கென வைக்கப்படுள்ள கேள்விப்பெட்டியில் உரிய நேரத்திற்கு முன்னர் இடப்படல் வேண்டும்.
02. கேள்விதாரர் இலங்கைப்பிரஜையாக இருக்கவேண்டும் என்பதுடன் 18 வயதுக்கு மேற்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.
03. உள்ளூராட்சி மன்றங்களினால் "தவறுனராகக்" கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப் பத்திரம் வழங்கப்படமாட்டாது. எனினும் படிவம் வழங்கப்பட்டபின் தெரியவரும் பட்சத்தில் அவரின் கேள்வி நிராகரிக்கப்படும்.
04. கேள்விப் பத்திரம் பெறவிரும்புவோர் விண்ணப்பங்களுடன் தேசிய அடையாள அட்டையும் அதன் நிழற்படப் பிரதியையும் கொண்டு வருவதுடன், தாம் வதியும் இடத்தின் பிரதேச செயலரால் விநியோகிக்கப்பட்ட குடும்ப அட்டை மற்றும் அதன் பிரதி என்பனவற்றையும் சமர்ப்பித்தல் வேண்டும். மூலப்பிரதிகள் மீள ஒப்படைக்கப்படும்.
05. தெரிவு செய்யப்படும் கடைகள், சந்தைகளுக்கான சித்தி தரக்கேள்விக்காரர் கேள்வித்தொகையின் 1/3 பங்கு தொகையை எம்மால் குறிப்பிடப்படும் திகதிக்கு முன்னதாக வைப்புத் தொகையாக செலுத்தி ஒப்பந்தம் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். மிகுதி 2/3 தொகையினை 2023.08.31 இற்கு முன்னர் மாதாந்தம் சம தொகைகளாக ஒவ்வொரு மாதமும் 05 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்துதல் வேண்டும். தவறுமிடத்து 10% தண்டப்பணம் அறவிடப்படும்.
06. தொடர்ந்து இரண்டு மாதங்களுக்கு மேல் மாதாந்த குத்தகைத் தொகையினை செலுத்த தவறின் எதுவித அறிவித்தலும் இன்றி குத்தகை ஒப்பந்தம் இரத்துச்செய்யப்படுவதுடன் வைப்புத் தொகை மீளளிக்கப்படமாட்டாது.
07. கேள்வி விண்ணப்பம் சமர்ப்பித்து சித்தி பெற்ற கேள்விதாரர் குறிக்கப்பட்ட கால அவகாசத்தினுள் ஒப்பந்தம் மேற்கொள்ளத் தவறும் பட்சத்தில் அவரது கேள்வி விண்ணப்பம் இரத்துச்செய்யப்படும். அத்துடன் எதிர்காலத்தில் அவர் கேள்வி விண்ணப்பங்களை சமர்ப்பிக்கமுடியாதவாறு கறுப்புப்பட்டியலில் சேர்க்கப்படுவார் என்பதோடு கேள்வி வைப்புப் பணமும் மீளளிக்கப்படமாட்டாது.
08. கேள்வி நிபந்தனைகள், அறிவுறுத்தல்களுக்கு அமையாத கேள்விக் கோரிக்கைகளை எந்தவொரு காரணமும் காட்டாது ஏற்கவோ, நிராகரிக்கவோ கேள்விச் சபைக்கு பூரண அதிகாரம் உண்டு.
09. கேள்வித்தொகையிலும் குறைந்த கேள்வி விண்ணப்பம் கோருபவர்களின் கேள்வி நிராகரிக்கப்படுவதுடன் கேள்வி வைப்புபணமும் மீளளிக்கப்படமாட்டாது.
10. கேள்வி அறிவித்தலுக்கும், நிபந்தனைகளுக்கும் அமைவாகவே கேள்விகளை அனுப்புதல் வேண்டும். கேள்விப்பத்திரத்தில் கொடுக்கப்படும் விபரங்கள் உண்மையாகவும் சரியானவையாகவும் இருப்பதுடன் இவைகளை அத்தாட்சிப்படுத்தும் பொறுப்பும் கேள்விதாரரைச் சார்ந்தது ஆகும். கேள்விப்படிவங்களை தருவதற்கு முன்பும் அதற்கு பின்பும் நிபந்தனைக்குரிய அத்தாட்சியினை சமர்ப்பிப்பதற்கு ஆயத்தமாக இருப்பது அவசியமாகும்.
11. மரக்கறிச்சந்தை மண்டபத்தினை குத்தகைக்கு எடுப்பவர்கள் உற்பத்தியாளர், கொண்டுவரும் பொருட்களின் விற்பனைவிலையில் 4% இற்கு மேல் வரி அறவிடக்கூடாது.
12. சந்தையில் விற்பனை செய்யப்படுகின்ற இறைச்சி, மீன் மற்றும் மரக்கறி போன்றன சுகாதாரமானதாக இருப்பதுடன் நியாயமான விலைக்கு பொதுமக்களுக்கு விற்பனை செய்வதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்.
13. கடை, சந்தைகளின் தூய்மைக்கு பொறுப்பாக இருப்பதுடன் கழிவுகளை சேகரித்து அப்புறப்படுத்துவதற்கு தாங்கள் முழுப் பொறுப்பாளியாவீர்கள்.
14. மரக்கறிசந்தைக்கு உற்பத்தியாளரால் விற்பனைக்கு கொண்டுவரப்படும் உற்பத்திபொருட்களின் நிறையில் கழிவுகள் எதனையும் குத்தகையாளரால் விதிக்கமுடியாது.
15. சந்தைகளை குத்தகைக்கு பெறுபவர் வியாபாரிகள் கோருமிடத்து சந்தைப்பகுதியில் இடம் இருப்பின் நியாயமான வாடகைக்கு வழங்குதல் வேண்டும்
16. சந்தைச்சுற்றாடலில் இருந்து 01Km (ஒரு கிலோமீற்றர்) சுற்றுவட்டாரத்தில் மரக்கறி, மீன், இறைச்சி வகைகள் என்பன விற்பனை செய்வது தடை செய்யப்பட்டுள்ளது.
17. நெடுங்கேணி சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வினியோக நிலையத்தினை குத்தகைக்கு பெறுபவர்கள் குறித்த குடிநீர் நிலையத்திற்கான மின்சார கட்டணத்தினை செலுத்தவேண்டும். அத்துடன் 25000 ரூபாவுக்கு உட்பட்ட திருத்தங்களை குத்தகை தாரரே மேற்கொள்ளவேண்டும். அதற்கு மேல் ஏற்படும் திருத்தங்கள் சபையினால் மேற்கொள்ளப்படும்.
18. உபகுத்தகைக்கு விடுவது தடைசெய்யப்பட்டுள்ளது என்பதுடன் குத்தகைக்கு எடுத்தவரே அலுவலக தொடர்பாடல்களை மேற்கொள்ளவேண்டும். அவ்வாறு தெரியவரின் குத்தகை ஒப்பந்தம் இரத்துச்செய்யப்படும்.
19. இங்கு குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு அமைவாகவும் ஒப்பந்த சரத்துகளுக்கு அமைவாகவும் என்னால் காலத்திற்கு காலம் எழுத்துமூலம் விதிக்கப்படும் நிபந்தனைகளுக்கு அமைவாகவும் ஒழுகுதல் வேண்டும்.
20. கேள்விப்பத்திரம் திறக்கப்படும் நேரத்தில் கேள்வியாளரோ அல்லது அவரது எழுத்து மூல சம்மதம் பெற்ற பிரதிநிதியோ சமூகமளிக்கலாம்.
21. கேள்வி விண்ணப்பங்களை உரிய நேரத்திற்கு முன்னதாக சமர்ப்பிக்கத் தவறின் கேள்வி விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதோடு கேள்வி வைப்புப்பணமும் மீளளிக்கப்படமாட்டாது.
22. மேலே குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் அனைத்தையும் ஏற்றுக்கொண்டே கேள்வி விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும்.
23. கேள்வி சம்பந்தமான மேலதிக விபரங்களை எமது தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**திரு. தருமலிங்கம் பார்த்தீபன்**
**தவிசாளர்,**
**வவுனியா வடக்கு பிரதேச சபை, நெடுங்கேணி.**

❖ (விண்ணப்ப படிவங்களை 2022.11.04 தொடக்கம் 2022.11.18 ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் முற்பகல் 9.00 தொடக்கம் பிற்பகல் 3.00 மணி வரையும் 2022.11.18 ஆம் திகதி அன்று பிற்பகல் 1.50 மணி வரையும் பெற்றுக்கொள்ளலாம்.)

(cs.38420) (2.6)

# ஓட்டோவுக்கு வாராந்தம் 10 லீற்றர் எரிபொருள்!
## பதிவுகள் ஆரம்பம்

முச்சக்கர வண்டிகளுக்காக வாராந்தம் வழங்கப்படும் எரிபொருள் ஒதுக்கீட்டை 10 லீற்றராக அதிகரிப்பதற்காக பதிவு செய்யும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

முதற்கட்டமாக மேல்மாகாணத்தில் இந்தச் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டது.

குறித்த செயற்றிட்டம் எதிர்வரும் ஆறாம் திகதி முதல் ஏனைய மாகாணங்களுக்கு அறிமுகப்படுத்தப்படும் என போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண தெரிவித்தார்.

www.wptaxi.lk என்ற இணையத்தளத்துக்குள் பிரவேசிப்பதன் ஊடாக மேல் மாகாண பயணிகள் முச்சக்கர வண்டிகளைப் பதிவு செய்யலாம்.

இது 11 படிமுறைகளின் கீழ் செயற்படுத்தப்பட வேண்டும். அதில் முச்சக்கர வண்டியின் ஒளிப்படங்களும் சேர்க்கப்பட வேண்டும் என அவர் மேலும் குறிப்பிட்டார். (ச-இ)

## வவுனியா வடக்கு பிரதேச சபை, நெடுங்கேணி.
## நிகழ்ச்சித்திட்ட வரவுசெலவுத்திட்டம் - 2023

வவுனியா வடக்கு பிரதேச சபையின் 2023 ஆம் ஆண்டுக்கான நிகழ்ச்சித்திட்ட வரவுசெலவுத்திட்ட வரைபு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் 03.11.2022 தொடக்கம் 10.11.2022 ஆம் திகதிவரை மக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது என்பதனை அறியத் தருகின்றோம்.

1. வவுனியா வடக்கு பிரதேச சபை தலைமை அலுவலகம்
2. வவுனியா வடக்கு பிரதேச சபை உப அலுவலகம் (நயினாமடு)
3. வவுனியா வடக்கு பிரதேச சபை உப அலுவலகம் (கனகராயன்குளம்)
4. வவுனியா வடக்கு பிரதேச சபை நூலகம் (நெடுங்கேணி)

மேற்படி பாதீட்டில் 2023 ஆம் ஆண்டில் எதிர்பார்க்கப்பட்ட வருமானங்கள், செலவீனங்கள் சம்மந்தமான விடயங்களும், மேற்கொள்ளப்படவிருக்கும் அபிவிருத்தி வேலைத் திட்டங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளது. எனவே குறித்த வரவுசெலவுத் திட்டத்தினை பொதுமக்கள் பார்வையிட்டு அபிப்பிராயங்கள் இருப்பின் தலைவர், வவுனியா வடக்கு பிரதேச சபை, நெடுங்கேணி எனும் எமது அலுவலக முகவரிக்கு தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ சமர்ப்பிக்கமுடியும்.

அபிப்பிராயங்கள் சமர்ப்பிக்கப்படவேண்டிய இறுதித் திகதி: **11.11.2022**

**தலைவர்,**
**வவுனியா வடக்கு பிரதேச சபை,**
**நெடுங்கேணி.**

(cs.38419) (2.6)

# மரண அறிவித்தல்

பிறப்பு 03 . 04 . 1951



இறப்பு 02 . 11 . 2022

## விஜயரட்ணம் சோமஸ்கந்தர் (சோமஸ்)

அளவெட்டி மேற்கைப் பிறபிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட விஜயரட்ணம் சோமஸ்கந்தர் (சோமஸ்) நேற்று (02.11.2022) புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற விஜயரட்ணம் - புனிதவதி தம்பதியரின் அன்புப் புதல்வனும், காலஞ்சென்ற இரவிகுலராஜன் மற்றும் சௌபாக்யகௌரி, செந்தில் செல்வம், காலஞ்சென்ற திருமகள் ஆகியோரின் அன்புச் சகோதரரும், இராஜேஸ்வரி, பத்மநாதன், ஜெயரட்ணம் ஆகியோரின் மைத்துனரும், செந்தூரன் அவர்களின் சிறிய தந்தையும், சுபாஜினி, ரக்ஷா ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.11.2022) வியாழக்கிழமை பிற்பகல் 2.00மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அளவெட்டி தம்மனை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**'இராஜஸ்தான்'**
**அளவெட்டி மேற்கு,**
**அளவெட்டி.**

(cs.47418) (2.6)

**தகவல்:**
**பத்மநாதன் குடும்பம்**
**021 224 3658**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முக்கிய அறிவித்தல்

கோப்பாய், கோப்பாய் மத்தி, காளிகோவிலடியைச் சேர்ந்த அப்பாத்துரை செந்தூரன் ஆகிய நான் **'இரத்தினம் ஒளி அமைப்பாளர்'** என்ற வியாபாரப் பெயரில் வியாபாரத்தினை காலம் காலமாக நடத்தி வருகின்றேன். எனது பெயரையும் வியாபாரப்பெயரையும் எனது அனுமதியின்றி பலர் சட்ட விரோத மாகவும் தவறாகவும் பயன்படுத்தி வருகின்றார்கள். இவ்வாறு எனது பெயரையும் வியாபாரப்பெயரையும் எனது அனுமதியின்றி சட்டவிரோதமாக பயன்படுத்துவார்களாயின் அவர்கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என அறியத்தருகின்றேன்.

**உரிமையாளர் : அ.செந்தூரன்**

(cs.47414) (2.6)

## மாபிள் வேலை

உங்கள் வீடுகளிற்கு தரமான முறையில் மாபிள் பதித்து தரப்படும். **ஒரு சதுர அடி - 80 ரூபா** பூச்சுவேலை, கட்டு வேலைகளும் செய்து தரப்படும்.

(CS 21503)(3/6) **077 334 1281**

## தென்னம்பிள்ளைகள் விற்பனைக்கு

எம்மிடம் குறைந்த காலத்தில் பயன்தரக்கூடிய தென்னம் நாற்றுக்களும்,மற்றும் நல்லின தென்னம்பிள்ளைகளும் விற்பனைக்குண்டு.

**077 659 2044**

# கேள்வி அறிவித்தல்
# வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்
# சபை நிதி 2021 (2022)

01. தலைவர், உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு, வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர், யாழ்ப்பாணம் வடமாகாணம், தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வீதி திருத்த வேலைகளுக்காக கோருகின்றார்.

02. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.

03. கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையில் காட்டியபடி பொருத்தமான தரத்தில் நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை (CIDA) பதிவுகள் மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.

04. தேவையான தகைமைகள் கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.

05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தலைவர், பெறுகைக்குழு வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, பருத்தித்துறை வீதி புத்தூர், யாழ்ப்பாணம் (தொலைபேசி இல: -021-205 8867, தொலைநகல்: 021-205 8866)இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் காலை 09:00 மணிமுதல் மாலை 16:00 மணிவரை 2022.11.03 ஆம் திகதியில் இருந்து 2022.11.16 ஆம் திகதி வரையான வேலை நாட்களில் கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.

06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் தலைவர், பெறுகைக்குழு வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, பருத்தித்துறை வீதி புத்தூர் யாழ்ப்பாணம் எனும் இடத்திலிருந்து 2022.11.03 ஆம் திகதியிலிருந்து 2022.11.16 ஆம் திகதி வரை காலை 09:00 மணிக்கும் 14:00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.2000/- செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.

07. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து தலைவர் பெறுகைக்குழு , வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, பருத்தித்துறை வீதி புத்தூர் யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு 2022.11.17 ஆம் திகதி மு.ப 11:00 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும் அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் இடப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரர் அல்லது அவர்களது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

08. கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

09. கேள்வி கோரல் பற்றிய முன்கூட்டிய கூட்டம் வலிகிழக்கு பிரதேச சபை மாநாட்டு மண்டபத்தில் 2022.11.10 ஆம் திகதி மு.ப.11:30 மணிக்கு நடைபெறும். இக்கூட்டத்தில் ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கலந்து கொள்ளலாம். இதற்கு எதுவித கொடுப்பனவுகளும் வழங்கப்படமாட்டாது.

| ஒப்பந்த இலக்கம் | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை (மில்லியனில்) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | கேள்வி சமர்ப்பிக்கப் படும் இறுதித் திகதியிலிருந்து கேள்வி செல்லு படியாகும் காலம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | பிணை வைப்பு (ரூபா) | செல்லுபடியாகும் காலம் |
| NP/14/41(13)/2/Council/PIII/01/2021 (2022) | கோப்பாய் மகாவித்தியாலய விளையாட்டு மைதான அருகாமை வீதி, கல்வியங்காடு | 3.43 | 90 நாட்கள் | C8 அல்லது C7 | 63 நாட்கள் | 35,000.00 | 2023.02.16 |
| NP/14/41(13)/2/Council/PIII/02/2021 (2022) | பழனியாண்டவர் கோவில் வீதி உப ஒழுங்கை, கல்வியங்காடு | 1.76 | 90 நாட்கள் | C9 அல்லது C8 | 49 நாட்கள் | 18,000.00 | 2023.02.02 |
| NP/14/41(13)/2/Council/PIII/03/2021 (2022) | நாயன்மார்கட்டு செம்மணி ஒழுங்கை திருத்தம்,இருபாலை தெற்கு | 1.90 | 90 நாட்கள் | C9 அல்லது C8 | 49 நாட்கள் | 20,000.00 | 2023.02.02 |
| NP/14/41(13)/2/Council/PIII/04/2021 (2022) | காளிகோவில் வீதி திருத்தம், கோப்பாய் மத்தி | 9.02 | 90 நாட்கள் | C7 அல்லது C6 | 77 நாட்கள் | 100,000.00 | 2023.03.02 |
| NP/14/41(13)/2/Council/PIII/05/2021 (2022) | கோப்பாய் தெற்கு பிரதேசசபை உப ஒழுங்கைகள் திருத்தம், கோப்பாய் தெற்கு | 1.64 | 90 நாட்கள் | C9 அல்லது C8 | 49 நாட்கள் | 17,000.00 | 2023.02.02 |
| NP/14/41(13)/2/Council/PIII/06/2021 (2022) | சிவலிங்கம் வீதி திருத்தம், கல்வியங்காடு | 3.18 | 90 நாட்கள் | C8 அல்லது C7 | 63 நாட்கள் | 32,000.00 | 2023.02.16 |
| NP/14/41(13)/2/Council/PIII/07/2021 (2022) | மருந்தக(டிஸ்பென்சறி)வீதி திருத்தம், உரும்பிராய் மேற்கு | 4.96 | 90 நாட்கள் | C8 அல்லது C7 | 63 நாட்கள் | 50,000.00 | 2023.02.16 |
| NP/14/41(13)/2/Council/PIII/08/2021 (2022) | அயடப்பல வீதி திருத்தம், உரும்பிராய் கிழக்கு | 4.15 | 90 நாட்கள | C8 அல்லது C7 | 63 நாட்கள் | 42,000.00 | 2023.02.16 |
| NP/14/41(13)/2/Council/PIII/09/2021 (2022) | பொக்கணை வீதி 3ம் ஒழுங்கை திருத்தம், ஊரெழு | 2.13 | 90 நாட்கள் | C8 அல்லது C7 | 63 நாட்கள் | 22,000.00 | 2023.02.16 |
| NP/14/41(13)/2/Council/PIII/10/2021 (2022) | அச்செழு அம்மன் கோவில் வீதி, அச்செழு | 4.19 | 90 நாட்கள் | C8 அல்லது C7 | 63 நாட்கள் | 43,000.00 | 2023.02.16 |
| NP/14/41(13)/2/Council/PIII/11/2021 (2022) | கருங்காலி வீதி திருத்தம்,அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி தெற்கு | 4.81 | 90 நாட்கள் | C8 அல்லது C7 | 63 நாட்கள் | 49,000.00 | 2023.02.16 |

**தியாகராஜா நிரோஷ்**
***தலைவர்,***
**உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு**
**வலிகாமம் கிழக்கு பிரதேச சபை**
**புத்தூர், யாழ்ப்பாணம்.**

**2022.11.03**

# மாணவர், வாசகர்களிடையேயான போட்டிக்கு விண்ணப்பம் கோரல்!

சாவகச்சேரி, நவ. 3

தேசிய வாசிப்பு மாதத்தையொட்டி 'அறிவார்ந்த சமூகத்துக்கான வாசிப்பு' எனும் தொனிப்பொருளில் சாவகச்சேரி நகரசபையின் ஏற்பாட்டில் நுணாவில் பொதுநூலகத்தினரால் மாணவர்கள் மற்றும் வாசகர்களிடையே நடத்தப்படவுள்ள போட்டிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மாணவர்களுக்கு பாடசாலைமட்ட இலக்கியப் போட்டிகளும், வாசகர்களுக்கிடையில் திறந்த மட்டப் போட்டிகளும் நடத்தப்படவுள்ளன.


அதன்படி மாணவர்களிடையே சொல்வதெழுதுதல், சித்திரம், கட்டுரை, நுண்ணறிவு, குறுக்கெழுத்துப் போட்டி, துண்டுப்பிரசுரப் போட்டி என்பனவும் திறந்த போட்டியாளர்களுக்கு வீட்டு நூலகம், வீட்டுத் தோட்டம், கட்டுரை, சிறுவர்களுக்கான கையெழுத்துப் பிரதி சேகரித்தல், போன்றனவும் நடத்தப்படவுள்ளன.

திறந்த போட்டியாளர்களுக்கு அறிவார்ந்த சமூகத்துக்கான வாசிப்பு, போதையில்லாத தேசத்தைக் கட்டிஎழுப்புவோம், கொரோனாத் தொற்றுநோய் காரணமாக நாம் கற்றுக்கொண்ட அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு ஒன்றுபட்ட சமூகமாக மீண்டெழுவோம், தற்போது அதிகரித்துவரும் காலநிலை மாற்றங்களும், அதனால் இன்று உலக நாடுகள் எதிர்நோக்கும் சவால்களும் அதற்குரிய தீர்வுகளும், உணவுப் பாதுகாப்புக்காக வீட்டு நுகர்வுக்குப் பொருத்தமான இயற்கை விவசாயம், ஆரோக்கிய உணவுப்பழக்கங்களும், சுதேச மருத்துவம் மற்றும் கைவைத்தியம் இவற்றின் அவசியமும் ஆகிய தலைப்பிலான கட்டுரைப் போட்டியும் நடத்தப்படவுள்ளது. பாடசாலை மட்டப் போட்டிகள் எதிர்வரும் 9,10,11 ஆகிய திகதிகளில் பிற்பகல் 2.30 மணிக்கு பிரிவு ரீதியாக நுணாவில் பொது நூலக மண்டபத்தில் நடைபெறும் எனவும் போட்டிகளுக்கான விண்ணப்பங்களை எதிர்வரும் 8ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(ச-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்கா நினைவில் இரண்டாம் வருடம்



மண் மகிழ் 26 . 09 . 1948

கண் நெகிழ 03 . 11 . 2020

கலாபூஷணம் யாழ்ரத்னா

## அந்தோனிப்பிள்ளை யோசேப் புஸ்பராசா

திருமறைக்கலாமன்றம்

அன்பின் மாமா!


துயரத்தின் ஈராண்டு நிறைந்தது மாமா
துன்பத்தின் சிகரத்தை சுமந்தது மாமா
உயரத்தில் எமை வைத்த உத்தமனே
உமக்கெங்கள் கண்ணீரும் சமர்ப்பணமே
அன்பினால் எமை நீ தாலாட்டினாய்
பண்பிலே தெய்வமாய் நிறைந்து நின்றாய்
நெஞ்சத்தில் உனையன்றி யாருமில்லை
சாவை வென்ற முடிவினைக் காணும் வரை
மாமா உந்தனுக்காய் வேண்டி நிற்போம்

83/11, பீச்றோட்,
குருநகர், யாழ்ப்பாணம்.

உங்கள் பிரிவால் வாடும்
மருமக்கள்

(cs.47411) (2.6)

# 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 10 . 05 . 1942

மறைவு 26 . 10 . 2020

## அமரர் கிருஸ்ணபிள்ளை அருணகிரிராசா


திதி : ஐப்பசி பூர்வபக்க தசமி (03.11.2022)

தோளில் எங்களைச் சுமந்து ஏற்றங்கள் பல
எமக்குத் தந்து சுற்றம் தொழ நின்ற தூயவரே
உங்கள் சுவாசங்கள் காற்றுடன் சேர்க
உங்கள் கண்ணொளி சூரியனுடன் சேர்க
ஐம்பூதங்களிலும் பொன்னுடல் சேர்க
எத்தனை காலங்கள் சென்றாலும்
உங்கள் நினைவுகள் எம்மனதில் நீங்காது
உங்கள் ஆத்மா சாந்தியடைய

என்றும் உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்

(CS 21479) (3/6)

# மரண அறிவித்தல்



## திரு.இளையதம்பி கந்தசாமி

சுதுமலை வடக்கைப் பிறப்பிடமாகவும் இணுவில் மேற்கை வதிவிடமாகவும் கொண்ட திரு.இளையதம்பி கந்தசாமி கடந்த (31.10.2022) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையதம்பி - பொன்னம்மா தம்பதியரின் கனிஷ்ட புதல்வனும், காலஞ்சென்றவர்களான அப்பையா - கனகம்மா தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற இராசலிங்கம் மற்றும் நேசரத்தினம் ஆகியோரின் சகோதரனும், இராஜேஸ்வரி, காலஞ்சென்ற தேவாம்பிகை மற்றும் தவமலர், பாஸ்கரன், சாவித்திரி கோடீஸ்வரன் ஆகியோரின் மைத்துனரும், குமரவேள் (சமுர்த்தி முகாமையாளர் பிரதேச செயலகம் - உடுவில்), பிரியதர்சினி (சுவிஸ்), உசாநந்தினி (பிரான்ஸ்), சிவாஜினி (றமா - பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சசிகலா, காலஞ்சென்ற தங்காதரன் மற்றும் சசிகரன், ரஜீந்திரன் ஆகியோரின் மாமனாரும், காருண்ஜா சுபானா, வந்தனா, தர்மிகா, அஜீசன், பிரகதி, ரித்திகா, பிரணவன், சௌமிகா, கவின், மகிழினி, இனியா ஆகியோரின் பேரனும் ஆவார்.


அன்னாரின் இறுதிகிரியைகள் இன்று (03.11.2022) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

இணுவில் மேற்கு,
இணுவில்.

தகவல்:
குடும்பத்தினர்
077 711 4123

(cs.47256) (2.6)

# கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 27 - 12 - 1927

மறைவு 01 - 11 - 2022

## அமரர் தம்பிப்பிள்ளை கந்தசாமி

(ஓய்வுபெற்ற ஆங்கில ஆசான்)

எமது நிறுவனத்தின் (வாணி ரெக்ஸ்) ஆரம்ப கால உறுப்பினரும் எமது நிறுவனத்தின் முதன்மையாக நின்று நெறிப்படுத்தி நிறுவனத்தின் வளர்ச்சிக்கு உறுதுணையாக வழிகாட்டி கடமை தவறாது கடமையாற்றும் **கிருஸ்ணதாசன்** (வாணி ரெக்ஸ்) அவர்களின் அன்பு மாமனாரான **தம்பிப்பிள்ளை கந்தசாமி** அவர்களின் பிரிவால் பெரும் துயருற்றுள்ளோம்.

அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

**ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!**

**வாணி ரெக்ஸ்
உரிமையாளரும்,
ஊழியர்களும்.**

**மணிவர்ணன் குடும்பம்
நல்லூர்.**

(CS 45465) (3/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சு.கட்சியுடன் இணைவோர் யாரென்பது இரகசியமாம்!

*புதிர் போடுகிறார் மைத்திரி*

கொழும்பு, நவ. 3

மத்திய குழுவின் தீர்மானத்தை மீறி அரசாங்கத்துடன் இணைந்தவர்களைவிட சிறந்த நபர்கள் விரைவில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைவர். ஆனால் அவர்கள் யார் என்பது அரச இரகசியமாகும்.

இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வெளிப்படையாகத் தெரிவித்துள்ளார். கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற மத்திய குழுக் கூட்டம் நிறைவடைந்ததன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாம் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் எந்தவொரு தேர்தலுக்கும் தயாராகவே உள்ளோம். எமக்கு தேர்தலில் தனித்துப் போட்டியிடக்கூடிய இயலுமையும் உள்ளது. எவ்வாறிருப்பினும் தற்போது பல கட்சிகளுடன் கூட்டணி அமைப்பது தொடர்பில் பேச்சுக்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. எதிர்காலத்தில் கூட்டணியாகத் தேர்தலில் போட்டியிடக் கூடிய வாய்ப்புக்களும் உள்ளன. எனவே நான் தனியொரு பாதையில் பயணிக்கப் போகிறேன் எனக் கூறப்படுவது உண்மைக்குப் புறம்பானதொரு விடயமாகும்.

அதேவேளை, ஒரு சிலர் குறிப்பிடுவதைப் போன்று எனது மகனை அரசியலுக்குள் அல்லது கட்சிக்குள் அழைத்து வர நான் எதிர்பார்க்கவில்லை. அவ்வாறு எண்ணியிருந்தால் சுதந் திரக் கட்சியின் இளைஞர் அணியில் ஏதாவதொரு பதவியில் அல்லது கட்சியின் உயர்பதவிகளுக்கு அவரை நியமித்திருக்க முடியும். ஆனால் தற்போது சுதந்திரக் கட்சி எந்தளவுக்கு ஜனநாயகமாகச் செயற்படுகின்றது என்பதை உணரமுடியும்- என்றார். (எ-14.இ)

## ஆட்பதிவுக் கட்டணங்கள் அதிகரிப்பு

தேசிய அடையாள அட்டை உள்ளிட்ட ஆட்பதிவுத் திணைக்களத்தின் பல்வேறு சேவைகளுக்கான கட்டணங்கள் கடந்த திங்கட்கிழமை முதல் நடைமுறைக்கு வரும் வகையில் அதிகரிக்கப்பட்டுள்ளன.

அதற்கமைய, முதல் தடவையாக தேசிய அடையாள அட்டையை விநியோகிப்பதற்காக அறவிடப்படும் கட்டணம் 200 ரூபாவாகவும் தேசிய அடையாள அட்டையில் திருத்தங்களை மேற்கொள்ள விண்ணப்பிக்கும் கட்டணம் 500 ரூபாவாகவும் தொலைந்த தேசிய அடையாள அட்டையின் நகலை வழங்குவதற்காக அறிவிடப்படும் கட்டணம் ஆயிரம் ரூபாவாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது என்று ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளர் நாயகம் வியானி குணதிலக்க தெரிவித்துள்ளார்.

அத்துடன் ஒரு நாள் சேவையூடாக தேசிய அடையாள அட்டையை விநியோகிப்பதற்கான விண்ணப்பக் கட்டணத்துக்கு மேலதிகமாக 2 ஆயிரம் ரூபாவும் அறவிடப்படவுள்ளது என்று மேலும் தெரிவித்தார். (எ-14.இ)




## எதிர்காலத்திற்கு பெறுமதி வாய்ந்த நல்வாழ்த்து!

நாட்டின் ஊக்கமிக்க பிள்ளைகளின் கனவுகள் வெற்றியடையும் வேளை அன்பார்ந்தவர்களின் ஒவ்வொரு பாசமிக்க அரவணைப்பிலும் இருப்பது அன்பான வாழ்த்துக்களே.

எட்டுத்திக்கும் ஒலிக்கும் நல்வாழ்த்துக்களுக்கு மத்தியில் ஸ்ரீ லங்கா இன்ஷூரன்ஸ் வழங்கும் சுப பெத்தும், புலமைப்பரிசிலில் சிறப்புர சித்தியடைந்த எமது நாட்டின் ஊக்கமிக்க பிள்ளைகளின் எதிர்காலத்திற்கு வழங்கக்கூடிய பெறுமதிமிக்க நல்வாழ்த்தாகும்.

### 375 சுப பெத்தும் புலமைப்பரிசில்கள்

2020ஆம் ஆண்டின் தரம் 5 புலமைப்பரிசில், கா.பொ.த. சாதாரண தரம் மற்றும் உயர்தர பரீட்சைகளில் சிறப்புர சித்தியடைந்த பிள்ளைகளுக்கு 225 சுப பெத்தும் புலமைப்பரிசில்கள் வழங்கப்படும்.

2021ஆம் ஆண்டின் தரம் 5 புலமைப்பரிசில் மற்றும் கா.பொ.த. உயர்தர பரீட்சைகளில் சிறப்புர சித்தியடைந்த பிள்ளைகளுக்கு 150 சுப பெத்தும் புலமைப்பரிசில்கள் வழங்கப்படும்.

சுப பெத்தும் புலமைப்பரிசிலுக்கான தகைமையை பெறுவதற்கு ஸ்ரீ லங்கா இன்ஷூரன்ஸ் ஆயுள் காப்புறுதி ஒப்பந்ததாரர்களுக்கு www.srilankainsurance.com ஊடாக இப்போது விண்ணப்பிக்க முடியும்.

**ஸ்ரீ லங்கா இன்ஷூரன்ஸ் ஆயுள் காப்புறுதி ஒப்பந்ததாரர்களின் பிள்ளைகளுக்கு**

| தரம் 5 புலமைப்பரிசில் | க.பொ.த. சாதாரண தரம் | க.பொ.த. உயர் தரம் |
|---|---|---|
| வருடாந்தம் ரூ. 20,000 வீதம் 5 வருடங்கள் | வருடாந்தம் ரூ. 40,000 வீதம் 2 வருடங்கள் | வருடாந்தம் ரூ. 50,000 வீதம் 3 வருடங்கள் |

2022 நவம்பர் 30ம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.
விண்ணப்பதாரர்களில் தேர்ந்தெடுக்கப்படும் சிறப்பு வெற்றியாளர்களுக்கு சுப பெத்தும் புலமைப்பரிசில்கள் வழங்கப்படும்.
மேலதிக தகவல்களுக்கு உங்கள் காப்புறுதி ஆலோசகர் அல்லது 0112 357 357 அழையுங்கள்.

*நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

SLIC
ஸ்ரீ லங்கா இன்ஷூரன்ஸ்
தந்தையும் தாயும் போன்று

Company Registration Number - PB 289



## கணக்குப்பதிவாளர் தேவை

யாழ்ப்பாணத்தில் பிரபல **மின்சாதனப் பொருள்களை** விற்பனை செய்யும் எமது நிறுவனத்துக்கு
**பின்வரும் பணியாளர்கள் தேவை**
**கணக்குப்பதிவாளர்**
(க.பொ.த. உ/த) வணிகப்பிரிவில் கற்றிருத்தல் விரும்பத்தக்கது)
மேற்படி தகைமையுடைய ஆண்கள் எதிர்வரும் **05.11.2022 சனிக்கிழமை முற்பகல் 10.00** மணிக்கு சுயவிபரக்கோவையுடன் நேரில் வரவும்.

**Jaffna Electricals**
No.94(6), Stanley Road, Jaffna.
T.P.: 021 222 2365
Fax: 021 222 4302
(cr.38386) (2.6)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்





*மக்கள் சேவை மகேசன் சேவை*
**திரு.செல்லத்துரை திருமாறன் (பிரபு)**
**(கோண்டாவில், தெல்லிப்பளை இராஜேஸ்வரி மண்டப உரிமையாளர், இராஜேஸ்வரி அறக்கட்டளை ஸ்தாபகர், சமாதான நீதவான் (JP)**

அச்செழு என்னும் கிராமத்தில் சகல வசதிகளும் கொண்ட புதிய மனைகளை அமைத்து வறிய, பெண்தலைமைத்துவக் குடும்பங்களுக்கு வழங்கிய கொடை வள்ளல் திரு.செல்லத்துரை திருமாறன் அவர்களை வாழ்த்துவதில் பெருமையடைகின்றது ஸ்ரீ காமாட்சி அம்பாள் தேவஸ்தான நிர்வாகத்தினர்.

வாழ்த்துவோர்
யாழ் வண்ணை ஸ்ரீகாமாட்சி அம்பாள் தேவஸ்தானம்
(நாச்சிமார் கோவில்)
தர்மகர்த்தாசபை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## பிரம்மஶ்ரீ இராமநாதசர்மா சுரேஸ்குமார சர்மா

வரணி இயற்றாலை கொட்டிக்கான் கந்தசுவாமி கோயிலடியை பிறப்பிடமாகவும் சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் வேலணை பெருங்குளம் முத்துமாரியம்மன் கோவிலடியை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட முன்னாள் சாவகச்சேரி செருக்கல் பிள்ளையார் கோயில், வாரியப்பர் சிவன் கோயில் சாவகச்சேரி கோயில் குடியிருப்பு முருகமூர்த்தி கோயில், கோயில் குடியிருப்பு வீரபத்திரர் கோயில், ஶ்ரீ மீனாட்சி அம்மன் கோயில் அர்ச்சகராகவும் பிரதம குருவாகவும் கடமையாற்றி தற்போது வேலணை பெருங்குளம் முத்துமாரி அம்மன் ஆலய பிரதம குருவாக விளங்கும் பிரம்மஶ்ரீ இராமநாதசர்மா சுரேஸ்குமார சர்மா அவர்கள் நேற்று (02.11.2022) புதன்கிழமை இறையடி சேர்ந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பா.இராமநாதசர்மா (நுணாவில்) இராஜேஸ்வரி அம்மாவின் மகனும், திருகோணமலையைச் சேர்ந்த நித்தியானந்த சர்மா-ஜெகதீஸ்வரி ஆகியோரின் அன்பு மருமகனும், ஹம்சவாஹினியின் அன்புக் கணவரும், டதுர்ஷிகாவின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற கருணாகரஐயர் அவரின் சகோதரனும் கமலேஸ்வரி, சிவனேஸ்வரி, சதீஸ்குமார் சர்மா, ரமேஸ்குமார்சர்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும், சுபாணு, சிவகணேசமூர்த்தி சர்மா, வைத்தியநாதசர்மா, கயல்விழி, கிரிஜா சிவானந்தசர்மா, மஞ்சுபாஷினி, குகனந்தசர்மா, மிருணாளினி, ஹரிப்பிரஷாந்த சர்மா, அனுஷாந்தினி, ஶ்ரீ சங்கர்சர்மா, விஜயதர்சினி ஆகியோரின் மைத்துனரும் ஸ்வர்ணா, விஷ்ணுஜன், காருண்ஜா, தரணிக்கா, அமிர்தவாசன் ஆகியோரின் சித்தப்பாவும் ஜஸ்வரியா, ரிசிகேஷ்சர்மா, ஹறித்விக்சர்மா, ருட்விக்சர்மா ஆகியோரின் பெரியப்பாவும் ஹறிப்பிரணவசர்மா, சபேஸ்கர், ஜாகினி ஆகியோரின் மாமாவும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் வேலணை முத்துமாரியம்மன் இல்லத்தில் நடைபெற்று பி.ப 2.00 மணிளவில் தகனக்கிரியைக்காக பூதவுடல் சாட்டி இந்து மயானத்திற்கு (வேலணை) எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பெருங்குளம் வேலணை
0776690508

தகவல்:
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

தோற்றம்
11
05
1938



மறைவு
02
11
2022

## சின்னத்துரை அம்பலவாணர்

(முன்னாள் மேலாளர், பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனம்)

பொன்னாலையைப் பிறப்பிடமாகவும், மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை அம்பலவாணர் நேற்று (02.11.2022) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - வள்ளியம்மை தம்பதியரின் மூத்த மகனும், காலஞ்சென்றவர்களான இளையதம்பி - பொன்னம்மா தம்பதியரின் மூத்த மருமகனும், காலஞ்சென்ற திலகவதியின் பாசமிகு கணவரும், சாந்தகுமாரி (ஆசிரியை - யாழ். பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி), வசந்தகுமாரி (நிதி உதவியாளர், பிரதேச செயலகம் - உடுவில்), விஜயகுமாரி (ஆய்வு உத்தியோகத்தர், உள்ளூராட்சித் திணைக்களம் - யாழ்ப்பாணம்), செல்வகுமாரி (உதவி பிரதேச செயலர் - சண்டிலிப்பாய்), ஆனந்தகுமாரன் (இ.போ.ச. கோண்டாவில்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜெயராஜன் (கமநல சேவை நிலையம் - காரைநகர்), விஜயரட்ணம் (கொல்லங்கலட்டி), கதிர்காமதாஸ் (ஒப்பந்தாரர் - இலங்கை மின்சார சபை, சுன்னாகம்), நேசரட்ணம் (நெஸ்லே கொம்பனி லிமிட்டெட்), ரேணுகா (ஆசிரியை - யாழ். மத்தியகல்லூரி) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், காலஞ்சென்ற வரதராசா மற்றும் குமாரசாமி, கைலாயநாதன், செல்வரத்தினம், கனகம்மா ஆகியோரின் பாசமிகு மூத்த சகோதரனும், காலஞ்சென்ற லலிதலோஜினி மற்றும் றஞ்சலாதேவி (ஓய்வுபெற்ற நிர்வாக உத்தியோகத்தர், பிரதேச செயலகம் - காரைநகர்), அருந்தவநாதன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மைத்துனரும், தனுஜன், சஞ்சீவன், தர்மிலா, கயூரிக்கா, சாஹித்தியன், வர்ஷிகா, கஜபிரதாபன், லக்ஷிரணிகா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.11.2022) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் மதவடி லேன், பொன்னாலை வீதி, மானிப்பாய் (ப.நோ.கூ.சங்க அருகாமை) நடைபெற்று, பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பிள்ளைகள்
077 218 5645, 077 210 5339

(cs.21481) (2.6)

# வலுப்படுத்தல் கருத்திட்ட கொடுப்பனவு வழங்கல்

சாவகச்சேரி, நவ. 3

தென்மராட்சி பிரதேச சமுர்த்தி அலகால் சமுர்த்தி பயனாளர்களுக்கு கடந்தவருடம் வழங்கப்பட்ட வலுப்படுத்தல் கருத்திட்டத்தின் கீழ் இதுவரை உரிய கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொள்ளாதவர்களுக்குரிய கொடுப்பனவு வழங்கப்படுகின்றது.

சமுர்த்தித் திணைக்களத்தால் தெரிவு செய்யப்பட்ட பொருண்மியம் நலிந்த பயனாளர்களுக்கு கடந்த வருடம் பல்வேறு உதவித் திட்டங்கள் வழங்கப்பட்டன. அதன்படி, தென்மராட்சிப் பிரதேசத்தில் வலுப்படுத்தல் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட 886 பயனாளர்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபா பெறுமதியான உதவிப் பொருள்கள் விநியோகிக்கப்பட்டன. பயனாளர்களில் சிலருக்கு உதவிக்கான வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டபோதிலும் உரிய கட்டுநிதி கிடைக்காததால் வழங்கப்படவில்லை. இவ்வாறான உதவிக் கொடுப்பனவு கிடைக்காதவர்களுக்குரிய கொடுப்பனவுக்குரிய கட்டுநிதி தற்போது கிடைத்ததையடுத்து வங்கிக் கணக்குகளுக்கு அனுப்பப்பட்டு வருகின்றது.

(ஒ-14-9)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

மலர்வு 20.06.1933

உதிர்வு 04.10.2022



கடந்த (04.10.2022) செவ்வாய்க்கிழமை அன்று சிவபதமடைந்த

## அமரர் அருணோதயம் சின்னத்தம்பி

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (03.11.2022) வியாழக்கிழமை நடைபெற்று, எதிர்வரும் (06.11.2022) ஞாயிற்றுக்கிழமை ஆத்ம சாந்திப்பிரார்த்தனையும் மதிய போசன நிகழ்வும் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்.

பலாலி வீதி,
உரும்பிராய் மேற்கு.

# மரண அறிவித்தல்



## தங்கராசா தேவகுலநாயகம்

(யாழ்.மத்திய கல்லூரியின் பணியாளர்)

பிறப்பு 02.01.1945

இறப்பு 02.11.2022

அரியாலையை பிறப்பிடமாகவும் நாவலர் வீதி, நல்லூரினை வதிவிடமாகவும் கொண்ட தங்கராசா தேவகுலநாயகம் (யாழ்.மத்திய கல்லூரியின் பணியாளர்) நேற்று (02.11.2022) புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தங்கராசா- முத்து ஆகியோரின் அன்புப் புதல்வனும் காலஞ்சென்றவர்களான பிள்ளையார் தங்கம் ஆகியோரின் மருமகனும் அன்னம்மாவின் அன்புக் கணவரும், அகுலப்பிரியன் (வணிக விஞ்ஞானம் 2nd year, மொறட்டுவ Uni) இன் அன்பு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.11.2022) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மகன் :- 0766034685
மைத்துனர் :- 0771177055

தகவல்:
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்



## யோகநாதன் குணராசா

பிறப்பு 18.07.1951

இறப்பு 02.11.2022

கச்சேரியைப் பிறப்பிடமாகவும் சரசாலை மற்றும் புங்கன்குளம் சந்தி அரியாலையை வசிப்பிடமாகவும் கொண்ட யோகநாதன் குணராசா நேற்று (02.11.2022) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற யோகநாதன், யோகம்மா தம்பதியரின் அன்பு மகனும் சின்னத்தம்பி அமுதம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் ஈஸ்வரியின் அன்புக் கணவரும் சறோஜினிதேவி, ரஞ்சினிதேவி, மாலினிதேவி, தவமணிதேவி, காலஞ்சென்றவர்களான கிருஷ்ணன், தவராசா ஆகியோரின் பாசமிகு சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.11.2022) வியாழக்கிழமை பி.ப 3.00 மணிளவில் அரியாலை புங்கன்குளம் சந்தியிலுள்ள அன்னாரின் தாயாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்.உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புங்கன்குளம் சந்தி, கண்டி வீதி, அரியாலை
0775532876, 0764634323

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இடர்...

கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர்மேலும் தெரிவித்துள்ளதாவது:-

முல்லைத்தீவு மாவட்டத்தில் 154 இடைத்தங்கல் முகாம்கள் தயார்ப் படுத்தப்பட்டுள்ளன. துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் 35 இடைத்தங்கல் முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன. இயற்கை இடர் ஏற்படும் பட்சத்தில் மக்களைப் பாதுகாப்பாகத் தங்க வைக்கத் தேவையான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன - என்றார். (அ-எ-19)

## கொழும்பில்...

இவ்வாறு கொழும்பில் நேற்று நடைபெற்ற போராட்டத்தின்போது அரசியல் கட்சிகளின் தலைவர்களும், சிவில் மற்றும் தொழிற்சங்கப் பிரதிநிதிகளும் வலியுறுத்தினர்.

அடக்குமுறையை உடன் நிறுத்த வேண்டும் என்றும், பயங்கரவாதத் தடைச்சட்டத்தை விரைவில் நீக்க வேண்டும் என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தை வலியுறுத்தி ஆர்ப்பாட்ட பேரணி ஒன்று நேற்றுக் கொழும்பில் முன்னெடுக்கப்பட்டது.

ஐக்கிய மக்கள் சக்தி சிறிலங்கா சுதந்திரக்கட்சி, முன்னிலை சோஷலிஸக் கட்சி, 43 ஆம் படையணி, சுதந்திர மக்கள் சபை உட்பட 20க்கும் மேற்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், தொழிற்சங்கம் மற்றும் சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொது மக்கள் எனப் பலர் இந்தப் பேரணியில் பங்கேற்றனர்.

### அனுமதி மறுப்பு

இந்த எதிர்ப்பு நடவடிக்கையை முன்னெடுப்பதற்கு அனுமதி வழங்குவதற்கு பொலிஸார் மறுத்திருந்தனர்.

இதற்கான காரணமும் ஏற்பாட்டுக் குழுவுக்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

இதற்கிடையில் காலை முதலே கொழும்பைச் சூழ பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது. போராட்டம் இடம்பெறும் எனக் கருதப்பட்ட இடங்களில் பொலிஸார், கலகமடக்கும் பொலிஸார் குவிக்கப்பட்டிருந்தனர்.

இருந்தபோதும், ஆர்ப்பாட்டப் பேரணியைக் கைவிடுவதற்கு ஏற்பாட்டாளர்கள் மறுப்புத் தெரிவித்தனர். நேற்றுப் பிற்பகல் 3 மணியளவில் மருதானையில் இருந்து ஆர்ப்பாட்டப் பேரணி ஆரம்பமானது. எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, 43 ஆம் படையணியின் ஒருங்கிணைப்பாளர் சம்பிக்க ரணவக்க, சுதந்திரக்கட்சியின் பொதுச்செயலாளர் தயாசிறி ஜயசேகர ஆகியோரும் மருதானையில் இருந்து, கொழும்பு கோட்டை நோக்கி நகர்ந்த பேரணியில் இணைந்திருந்தனர்.

### பொலிஸ் தடுப்பரண்

'டெக்னிகல்' சந்தி ஊடாக கோட்டை, ரயில் நிலையத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கூட்டத்தில் பங்கேற்பது என்று திட்டமிடப்பட்டிருந்தபோதும், டெக்னிகல் சந்தி மற்றும் மிதக்கும் சந்தைக்கு இடைப்பட்ட பகுதியில் பொலிஸார் குவிந்திருந்தனர். போராட்டக்காரர்கள் முன்னேற முடியாத வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

இதனால் பொலிஸாருக்கும், போராட்டக்காரர்களுக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டு, பதற்றம் உருவானது. தள்ளு முள்ளும் இடம்பெற்றது. பொலிஸாரின் பாதுகாப்புக் கவசத்தை உடைத்துக்கொண்டு முன்னோக்கிச் செல்வதற்கு போராட்டக்காரர்கள் முற்பட்டாலும் அதற்கு இடமளிக்கப்படவில்லை. நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிக்கா உள்ளிட்டவர்கள் பொலிஸாருடன் முரண்பட்டனர்.

### பின்வாங்கிய சஜித்

இதற்கிடையில் போராட்டக்காரர்கள் தடுக்கப்பட்ட இடத்திலேயே கூட்டம் நடத்தப்பட்டது. இதற்குப் போராட்டத்தில் பங்கேற்ற பலர் எதிர்ப்பை தெரிவித்தனர். பொலிஸாரின் பாதுகாப்பு தடையை உடைத்து முன்னோக்கி நகரவேண்டும் என எதிர்க்கட்சித் தலைவரிடம் வலியுறுத்தினர். எனினும், அதற்கு அவர் உடன்படவில்லை. பின்னர் அங்கிருந்து வெளியேறினார். இதன்போது எதிர்க்கட்சித் தலைவருக்கு எதிராக சிலர் கோஷம் எழுப்பினர்.

அரசியல் பிரமுகர்கள், தொழிற்சங்கவாதிகள் உள்ளிட்டோர் உரையாற்றிய பின்னர் போராட்டக்காரர்கள் கலைந்துசென்றனர்.

"நாம் எவரிடமும் அனுமதி பெற வேண்டியதில்லை. திட்டமிட்டப்படி பேரணி நடத்தப்பட்டது. இது ஆரம்பம் மட்டும்தான். அரசாங்கம் திருந்தாவிடின் அடுத்தக்கட்ட நடவடிக்கை இடம்பெறும்" - என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் ஊடகங்களிடம் தெரிவித்தார். (அ-எ-44)

## போதை...

அமைச்சர் வெளியிட்டுள்ள கருத்து மக்களைப் பேரதிர்ச்சிக்கு உள்ளாக்கியுள்ளது.

வடக்கில் இளையோரைக் குறிவைத்து போதைப்பொருள் விநியோகிக்கப்படுகின்றது. பாடசாலை மாணவர்களும் இதற்கு அடிமையாகியுள்ளனர்.

எதிர்காலத்தில் எமது சமுதாயத்தை வழிநடத்துபவர்கள் இன்று போதைப் பொருள் பாவனையால் அழிந்துபோவதை நாம் கைகட்டி வேடிக்கை பார்க்க முடியாது. இதற்கு உடனடியாக முற்றுப்புள்ளி வைக்கவேண்டும்.

வடக்கில் மட்டுமன்றி தமிழர் வாழும் பிரதேசங்களில் போதைப்பொருளை முற்றாக ஒழிக்க அனைவரும் ஒன்றிணைந்து நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டும் - என்றார். (அ-எ-22)

## பாணில்...

இது தொடர்பாக அந்தச் சங்கங்கள் இணைந்து விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கடந்த காலங்களில் நாட்டின் இதர பகுதிகளில் பாணின் விலை அதிகரிக்கப்பட்டபோது நாம் பாண் விலையைக் கட்டுப்படுத்தி 200 ரூபாவாக வைத்திருந்தோம். நாட்டின் ஏனைய இடங்களில் ஒரு இறாத்தல் பாண் 220 ரூபா முதல் 250 ரூபாவரை விற்பனை செய்யப்பட்டிருந்தது.

தற்போது நாட்டின் ஏனைய இடங்களில் பாணின் விலை சிறிதளவு குறைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், நாம் ஏற்கனவே இலாப நோக்கமற்று பாணின் விலையைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதால் பாண் விலையில் மாற்றம் ஏற்படாது.

கோதுமை மா விநியோக நிறுவனங்களான பிறிமா மற்றும் செரண்டிப் நிறுவனங்கள் கோதுமை மாவின் விலைகளைக் குறைக்கும் சந்தர்ப்பத்தில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் பாணின் விலை குறைக்கப்படும் - என்றுள்ளது. (அ-எ)

## குழப்பத்தால்..

நிலைமை காணப்பட்டது. அதனால் பேரணியில் இருந்து பலர் இடைநடுவே விலகிச் சென்றனர் என்று கொழும்பு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

மருதானையில் ஆரம்பித்து டெக்னிக்கல் சந்தியின் ஊடாக கோட்டையை நோக்கிச் சென்றுக்கொண்டிருந்த பேரணியை புறக்கோட்டை வீதியில் பொலிஸார் வழிமறித்தனர். அந்தப் பொலிஸ் தடுப்பரணை மீறிச் செல்வதா? அல்லது பேரணியை நிறுத்துவதா? என்பது தொடர்பில் அங்கு குழப்ப நிலைமை காணப்பட்டது.

அதையடுத்து பேரணியில் கலந்துகொண்ட பலர் அங்கிருந்து சலிப்புடன் விலகிச் சென்றதை அவதானிக்க முடிந்தது என்று தெரிவிக்கப்படுகின்றது. ஆரம்பத்தில் பெரும் எண்ணிக்கையானோருடன் ஆரம்பமான பின்னர் இந்தக் குழப்பங்களால் பின்னர் நலிவடைந்தது என்றும் தெரிவிக்கப்பட்டது. (அ-எ)

## நீதி சாகாது...

மான ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறுத் தினத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் சந்தேகநபராக இருந்த நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனை சட்டமா அதிபரின் ஆலோசனைக்கு அமைவாக அந்த வழக்கிலிருந்து விடுவித்து கொழும்பு கோட்டை நீதிவான் திலின கமகே நேற்று உத்தரவிட்டார். இந்த வழக்கு தொடர்பான விசாரணை மீண்டும் எடுத்துக்கொள்ளப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

உயிர்த்த ஞாயிறுத் தினத் தாக்குதல் தொடர்பில் ரிஷாத் பதியுதீன் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டு பின்னர் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டிருந்தார்.

இந்த வழக்கிலிருந்துதான் விடுவிக்கப்பட்டமை தொடர்பில் அவர் ஊடகங்களிடம் தெரிவித்ததாவது:-

அரசியல் ரீதியில் என்னைப் பழிவாங்கும் வகையில் ராஜபக்ச கும்பல் பல நடவடிக்கைகளை எடுத்திருந்தது. அதில் பிரதானமானதே என் மீதான உயிர்த்த ஞாயிறுத் தினத் தாக்குதல் வழக்கு. அந்தச் சம்பவத்துடன் என்னைத் தொடர்புபடுத்தி பொய்க்குற்றச் சாட்டுக்களைச் சுமத்தியிருந்தது ராஜபக்ச அரசு.

அதுமட்டுமன்றி சந்தேகநபராக என்னைப் பெயரிட்டு, வலுக்கட்டாயமாகக் கைதுசெய்து சிறையிலும் அந்த அரசு அடைத்திருந்தது. பின்னர் பிணையில் என்னை நீதிமன்றம் விடுவித்திருந்தது. தற்போது உயிர்த்த ஞாயிறுத் தினத் தாக்குதல் வழக்கிலிருந்து எனக்கு முழுமையான விடுதலை கிடைத்துள்ளது. ராஜபக்சக்களின் பழிவாங்கலில் இருந்து மீண்டுவிட்டேன். நீதி ஒருபோதும் சாகாது- என்றார். (அ-எ-22)

## ஆர்ப்பாட்டம்...

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

மக்கள் விரும்பிய மாற்றம் ஏற்பட்டுவிட்டது. அதனால் அவர்கள் இப்போது போராட்டங்களை விரும்பவில்லை.

எதிரணி அரசியல்வாதிகளும், அவர்களின் சகாக்களும்தான் இப்போது வீதிகளில் இறங்கிப் போராடுகின்றனர். எதிரணியினர் தங்கள் சுயலாப அரசியலுக்காகவே போராட்டங்களை நடத்துகின்றனர். ஆனால், போராட்டங்களால் ஒன்றும் நடக்கப்போவதில்லை. அவசியமற்ற இந்தப் போராட்டங்களை நிறுத்திவிட்டு, நாட்டை மீளக்கட்டியெழுப்ப ஒன்றிணையவேண்டுமென்று எதிரணிக்கு நான் மீண்டும் அழைப்பு விடுகின்றேன் - என்றார். (அ-எ-22)

## காணி...

செயலகம் வரை சென்றது. பிரதேச செயலகம் முன்பாக ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டதுடன், பிரதேச செயலரிடம் மனு ஒன்றும் கையளிக்கப்பட்டது.

வலிகாமம் வடக்கு உட்பட தமிழர் தாயகம் எங்கும் அபகரிக்கப்பட்ட, அபகரிக்கப்படவுள்ள காணிகள் தொடர்பான அனைத்துச் செயற்பாடுகளும் நிறுத்தப்பட்டு, அனைத்துக் காணிகளும் சட்டபூர்வ உரிமையாளர்களிடம் கையளிக்கப்படவேண்டும்.

தமிழர் தாயகம் எங்கும் ஆக்கிரமித்து நிற்கும் சிங்கள ஆயுதப் படைகள் உடனடியாக வெளியேற்றப்பட வேண்டும்.

தமிழினத்தின் அரசியல் தலைவிதியைத் தீர்மானிக்கும் உரிமை தமிழ் மக்களிடம் மட்டுமே உள்ளது. தமிழ் மக்களுக்கான நிரந்திர அரசியல் தீர்வு தொடர்பான தீர்மானங்களை சிங்கள அரசோ, ஏன் தமிழ் அரசியல் வாதிகள் கூடத் தீர்மானிக்க முடியாது. ஒரு சர்வஜன வாக்கெடுப்பின் மூலம் தமிழ் மக்களே தீர்மானிப்பதற்கான வழி ஏற்படுத்தப்படவேண்டும் என்பன போன்ற கோரிக்கைகள் அந்த மனுவில் குறிப்பிடப்பட்டிருந்தன.

"இந்த மண் எங்களின் சொந்த மண்", "எமது நிலம் எமக்குவேண்டும், எமது கடல் எமக்கவேண்டும்", "இராணுவமே வெளியேறு, கடற்படையே வெளியேறு", "வடக்கும் - கிழக்கும் தமிழர் தாயகம்" என்பன போன்ற கோஷங்கள் ஆர்ப்பாட்டத்தின்போது எழுப்பப்பட்டன.

இந்த ஆர்ப்பாட்டம் மற்றும் பேரணியில் வடக்கு - கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள், காணிகளை இழந்தவர்கள், சமூகச் செயற்பாட்டாளர்கள், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், சமூக மட்ட அமைப்புக்களின் பிரதிநிதி கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (அ-எ-27-26-20)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அரசாங்கத்துக்கு சலுகைகள்; மக்களோ பட்டினிச் சாவில்!

## பேராயர் ரஞ்சித் ஆண்டகை ஆதங்கம்

**கொழும்பு, நவ. 3**

**நாட்டில் தற்போது மனச்சாட்சியற்ற தலைமைத்துவமே காணப்படுகிறது. எவருக்கும் பொறுப்புக்கூறுவதற்கு அவசியமற்ற நிர்வாகப் பொறிமுறையை ஏற்படுத்தி அவற்றினூடாக தமக்குச் சாதகமாக சட்டங்களைப் பயன்படுத்திக்கொள்கிறார்கள். இது நாட்டுக்குப் பாரதூரமான விளைவை ஏற்படுத்தும்.**

இவ்வாறு பேராயர் மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை கருத்துரைத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டிலுள்ள பெரும்பாலான மக்கள் ஒரு வேளை உணவைக் கூட பெற்றுக் கொள்வதில் கடும் நெருக்கடிகளை எதிர்கொள்கின்றனர். இந்தச் சந்தர்ப்பத்தில் 2023ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத் திட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமக்கான காப்புறுதித்தொகையை 10 லட்சம் வரை அதிகரித்துள்ளனர்.

யாருக்கும் பொறுப்புக்கூறுவதற்கு அவசியமற்ற நிர்வாகப் பொறிமுறையை நாட்டில் ஏற்படுத்தி, சட்டத்தை தமது தேவைக்கேற்ப அமைத்துக் கொள்கின்றனர்.

இவ்வாறான மனச்சாட்சியற்ற அரசியல்வாதிகளைக் கொண்டு நாட்டை முன்னேற்றுவது இலகுவான விடயமல்ல. மக்கள் பிரதிநிதிகளின் செயற்பாடுகளாக இவற்றைக் கருத முடியாது. நாட்டில் மனச்சாட்சியுள்ள மக்கள் பிரதிநிதிகள் எங்கே? சட்டத்தை சிறிதளவேனும் கவனத்தில் கொள்ளாமல் மக்களை மேலும் நெருக்கடிக்குள் தள்ளி அநீதியான முறையில் ஆட்சி செய்வதற்காகவா மக்கள் அவர்களைத் தெரிவு செய்கிறார்கள்?

அபிவிருத்தியடைந்த நாடுகளில் மோசடிகளில் ஈடுபட்டமை தொடர்பில் எவரேனுமொரு அரசியல்வாதியின் பெயர் வெளியிடப்பட்டால் அவர் உடனடியாக பதவி விலகி விடுவார்.

ஆனால் எம் நாட்டிலுள்ளவர்கள் பதவி விலகுவதற்குப் பதிலாக அவர்களது பலத்தை மேலும் அதிகரித்துக் கொள்கின்றனர். இதுபோன்ற மோசடிகள் நிறுத்தப்பட வேண்டும். மனச்சாட்சி கொண்ட தலைமைத்துவமொன்று நாட்டுக்கு அவசியமாகும்- என்றார். (ச-இ)



## கௌரவிப்பு

சாவகச்சேரி, நவ.3

தென்மராட்சி கல்வி வலயத்தின் ஏற்பாட்டில், வலய முன்பள்ளி ஆசிரியர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு, சாவகச்சேரி நகரசபை பொன்விழா மண்டபத்தில் நேற்று புதன்கிழமை இடம்பெற்றது. இதன்போது தென்மராட்சி கல்வி வலயத்தில் உள்ள 86 முன்பள்ளிகளின் 187 ஆசிரியர்களும், முன்பள்ளிகளில் கடமையாற்றி இளைப்பாறியவர்களும், விலகியவர்களும் கௌரவிக்கப்பட்டனர். தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் த.கிருபாகரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடமாகாண கல்வி அமைச்சின் ஆரம்பப் பிள்ளைப் பருவ அபிவிருத்திப்பிரிவின் பணிப்பாளர் ஏ.எஸ்.சற்குணராஜா கலந்துகொண்டார். (ஒ-14-9)




இணைந்த கரங்கள் அமைப்பால் கிளிநொச்சி கரியாலை நாகபடுவான் அ.த.க. பாடசாலையில் கல்விகற்கும் 71 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் மற்றும் பாதணிகள் அண்மையில் வழங்கப்பட்டன. (ய-159)





### வீட்டுப்பணிப்பெண் தேவை

சாவகச்சேரி பகுதியிலுள்ள வீட்டில் தங்கியிருந்து வீட்டுவேலை செய்ய 45 வயதிற்கு மேற்பட்ட வீட்டுப்பணிப்பெண் தேவை.
சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

**0741554950, 0777885175**

### விற்பனைக்கு

அரபு நாட்டில் இருந்து கொண்டு வரப்பட்ட (TCL 55`` TV) தொலைக்காட்சி பெட்டியும் மற்றும் பல இலத்திரனியல் பொருட்களும் விற்பனைக்கு உண்டு. (CS 21479) (3/6)

T.Sooriyakumar, 077 257 1005
72, Karaikaddu Lane Vannarpannai Jaffna.

### வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் MASS FOOD RESTURANTS இற்கு கீழ்க்கண்ட வேலையாட்கள் தேவை.
சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

- Western Style Chef
- சமையல்காரர் (அப்பம், வடை, தோசை, பிட்டு, இட்லி செய்யக்கூடியவராக இருத்தல் வேண்டும்.)
- உதவியாட்கள்
- நேரில் வரவும் **இல.270, பிரதான வீதி, யாழ்ப்பாணம்**

**0776648391, 0778448592**


## மரண அறிவித்தல்

தோற்றம் 06 . 08 . 1953



மறைவு 31 . 10 . 2022

### திருமதி இராசமணி தளையசிங்கம்

ஆலடி வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவிலை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசமணி தளையசிங்கம் அவர்கள் கடந்த (31.10.2022) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராசா மகேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற தளையசிங்கம் (இராசமணி களஞ்சிய உரிமையாளர்) அவர்களின் அன்பு மனைவியும், உதயச்செல்வன் (ஜேர்மனி), திருவருட்செல்வன் (கனடா), றோகினி (சுவிஸ்), கார்த்திகா (நியூசிலாந்து) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சிவாஜினி, அஜந்தினி, திலகரட்ணம், சிவகுமார் ஆகியோரின் அன்பு மாமியாரும், லினோஜன், லக்சயன், உதீசன், ஆதிஸ், ஹரினி, திலக்சன், தீபிகா, விஸ்மி, சானு, மித்தனா ஆகியோரின் ஆசைப் பேர்த்தியாரும், காலஞ்சென்றவர்களான சிவமணி, விஜயகுமாரி, பரமநாதன் மற்றும் கமலராணி, பாலச்சந்திரன் ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.11.2022) வியாழக்கிழமை பி.ப 1.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோண்டாவில் கட்டை ஆலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் சென்று தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**ஆலடி வீதி, கோண்டாவில் கிழக்கு,**
**கோண்டாவில்.**
**021 222 3501, 074 3136 121**

**தகவல்:**
**பிள்ளைகள்.**

(CS 21485) 1/6

## துயர் பகிர்கின்றோம்



### பிரம்மஸ்ரீ இராமநாதசர்மா சுரேஸ்குமாரசர்மா

பெருங்குளம் முத்துமாரி அம்மன் ஆலயத்தின் வளர்ச்சிக்காக கடந்த ஆறு வருடங்களாக அயராது பாடுபட்ட ஆலய குரு பிரம்மஸ்ரீ இரா.சுரேஸ்குமாரசர்மா அவர்களின் திடீர் மறைவிற்கு (02.11.2022) ஆழ்ந்த அனுதாபங்களை அவரின் குடும்பத்தாருக்கும் உறவினர்களுக்கும் தெரிவித்துக்கொள்வதுடன் அவரின் ஆன்மா அம்மனின் பாதார விந்தங்களை அடைவதற்கு அம்மனை வேண்டி நிற்கின்றோம்

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**பரிபாலனசபை, திருப்பணிச்சபை**
**வேலணை-பெருங்குளம் முத்துமாரி அம்மன் கோவில்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 03.11.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.